தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் எ	பிரசோற்பத்தி, ஆடி.	மலர் ச

பின்னங்குடிச் சுப்பிரமணியசாத்திரியார்

தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக்

குறிப்புரையும் மறுப்பும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி

முகவுரை.

பின்னங்குடிச் சுப்பிரமணியசாத்திரியார் என்பவரால் எழுதப்பட்ட 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு' என்று பெயரிடப்பட்ட புத்தகம் ஒன்று சென்னையில் உள்ள தமிழ் நாவலராகிய நண்பர் ஒருவர் சின்னாள்கட்குமுன் அளிக்கப்பெற்றேம். தொல்காப்பியம் என்பது வானவர்க்கும் கிடைத்தற்கரிய இனிய தமிழ் இலக்கணநூல் என்பது தெள்ளிதாகையாலே, அக்குறிப்புரையை யாம் ஒருவாறகப் படித்துப் பார்க்கலுற்றேம். பார்த்ததில், தமிழ்மொழி ஓர் தெய்வத் திருமொழி என்பதும், தொல்காப்பியம் என்பது இப்போது வழக்கிலுள்ள அந்தணர் திருமறைகள் நான்கிற்கும் முற்பட்ட பழையநூல் என்பதும், அவர் தெரிந்துகொண்டவராகக் காணப்படவில்லை. சொல்லதிகாரச் சூத்திரங்களில் சிறப்புற்றவைகளை எடுத்துக்கொண்டு, அவற்றிற்கு உரையாசிரியர்கள்

ஆகிய இளம்பூரணர் தெய்வச்சிலையார் சேனாவரையர் நச்சினார்க்கினியர் கல்லாடர் என்னும் இவர்கள் எழுதிய உரைகளை, அவர் ஒருவகையாக ஆராய்ச்சிசெய்து, இவ்விடத்தில் இளம்பூரணர் உரை தவறு; இவ்விடத்தில் தெய்வச்சிலையார் உரை தவறு; இவ்விடத்தில் சேனாவரையர் உரை தவறு; இவ்விடத்தில் நச்சினார்க்கினியர் உரை தவறு-என்று எழுதிச் சென்றனர். சிலவிடங்களிலே மாதவச் சிவஞானமுனிவருடைய சூத்திர விருத்தி முதலியவற்றிலுள்ள வடமொழிமுடிவைப்பற்றி உரைக்குறிப்புக்களையும் காட்டி இவையும் தவறு என்று எழுதிச் சென்றார். இங்ஙனம் இவர் எழுதிச்செல்லுதற்கு, அப்பேராசிரியர்களினும் நுணுக்கமாக ஆராயும்திறன் இவர்க்குளதோ என்று ஆராய்வான் புகுந்தேம். புகவே, அவருடைய தமிழாராய்ச்சி அடிப்படைவலியற்றதோர் மாளிகையாம் எனவும் ஆங்கிலமொழியினும் வடமொழியினும் தமக்கு ஒருவாறாக அமைந்த புலமையை மதித்துக்கொண்டு, அம்மொழிப்புணையே துணையாகக்கொண்டு 'தமிழெனும் அளப்பரும்' கடலை எளிதில் நீந்திவிடலாமென்று நினைத்து இறங்கினர் எனவும், தமிழையும் தமிழ் நூலாசிரியரையும் தமிழ் உரையாசிரியரையும் இகழ்ந்து, வடமொழியும் வடமொழி நூலுமே சிறந்தனவென்று காட்டித், தாம் அத்தமிழ் நூலாசிரியரினும் உரையாசிரியரினும் சிறந்த மதியுடையாரென்று தமிழுலகிற்குக்காட்டிப், புகழையடையவேண்டுமென்பதே அவருடைய உள்ளக்கருத்தெனவும் தெரியலாயிற்று. சிவஞானமுனிவர் கருத்தையும் ஆராய்வதற்கு முனைந்து எழுந்தவர் அவரால் இயற்றப்பட்ட சூத்திரவிருத்தி முதலிய இலக்கண நுட்ப நூல்களினும், திராவிடமாபாடிய முதலியவற்றினும், தருக்கநூல் முதலியவற்றினும், மற்றுள்ள சங்கவிலக்கியங்களின் உரைகளினும் நன்கு பயின்றிருத்தல் வேண்டுமே. இவருடைய குறிப்புரையின் முடிவிலே 'இச்சிறு நூல் எழுத எனக்கு மிக்க உதவியாயிருந்தது வடமொழி வியாகரணம் தருக்கம் பூர்வமீமாம்சை இவற்றிலுள்ள சிற்றறிவே' என்று இவர் தாமே கூறுவதால், இவருக்கு மேலே கண்ட தமிழ் நூலுரைகளின் பயிற்சி சிறிதே என்பது ஒருதலை. ஆகவே,

தமிழிலக்கணவிலக்கியங்களிலெல்லாம் முதிர்ந்த அறிவுடையாரே ஆராய்தற்குரிய தொல்காப்பியத்தை வடமொழி இலக்கணத்தில் மட்டும் முதிர்ந்த அறிவுடையார் எங்ஙனம் ஆராய்தற்குரியர்?

அந்தோ! இதுகருதிப்போலும் சிறப்புப்பாயிர விலக்கண வகையுள் ஒன்றாகிய யாப்பு என்பதற்கு 'இன்னநூல் ஆய்ந்த பின்னர் இந்நூல் கேட்கற்பாற்று' என்பது பொருளாகக் கூறி, அம்முறையைக் கைக்கொள்ளாது பெருநூலை ஆராய்வான் புகுவார் இடர்ப்பட்டு மயங்குபவென்று சிவஞானமுனிவர் பாயிர விருத்தியுள்ளே கூறினர். எனவே இக்குறிப்புரையாளர் எழுதிய குறிப்புரைகள் பெரும்பான்மையும் பிழைபடுவன வாயின.

அதுவேயுமன்றிக் குறிப்புரையின் நடையைப்பார்க்கின் அது தமிழ் உரை நடையாகவே காணப்படவில்லை. ஆங்கில மொழி நடை தமிழில் புகட்டப் பட்டிருப்பதாகக் காணப்படுகிறது. முன்னமே சிலர் வடமொழிகளை மிகப்பலவாகத்தமிழ் நூல்களிலும் உரைகளிலும் பெய்து தமிழின் இயற்கையழகு தெரியாதபடி மறைத்துள்ளார் என்னும் குறைபாடு உடையேம். இப்போது இக்குறிப்புரையாளர் இன்றியமையாத ஒருசில ஆங்கில மொழியே யன்றி அம்மொழியின் நடையையும் தமிழில் கொண்டுவந்தது மிகவும் இரங்கற்பாலது. தொல்காப்பியவுரைகளின்மேல் ஆராய்ச்சியுரையொன்று எழுதப்புகுந்தார் அவ்வவுரையாசிரியருள் எவருடைய நடையையேனும் கைக்கொண்டு எழுதல்வேண்டும். அல்லது இக்காலத்தும் இனியதமிழ் உரை நடை எழுதுதலில் வல்ல மறைமலையடிகள், வரதநஞ்சைய பிள்ளையார், உலகநாதபிள்ளையார் முதலியோர் உரைநடையைக் கைக்கொண்டு எழுதியிருப்பின் நன்றாயிருக்கும்.

அதுநிற்க, எமக்கு உரிய நண்பராகிய தமிழ்ப்புலவர் பலரும், பொருத்தம் சிறிதும் இல்லாத அக்குறிப்புரைக்கு மறுப்பெழுதிப் பழிப்பற்ற நூலாசிரியருடைய பெருமையையும் உரையாசிரியரின் பெருமையையும் விளக்கல் வேண்டும் என்ற

மைகொண்டு, தஞ்சைக் கரந்தைத் தமிழ்க் கழகத் தலைவர் ஆகிய உமாமகேசுரம் பிள்ளையவர்கள் பணித்தவாறு, அக்குறிப் புரைக்கு மறுப்புரை எழுதும் கடனை மேற்கொண்டாம்.

அக்குறிப்புரைக்கு இக்காலத்து மதுரையில் தமிழ்ச்சங்கம் நிறுவிய புலவர் பெருந்தகையால் எழுதப்பட்ட பாயிரம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. ஆயினும் அதுகொண்டு குறிப்புரை யாளர் கொள்கைகள் பழுதுபட்டனவல்லவென்று மயங்கல் வேண்டா. அப்பாயிரத்திலே குறிப்புரையாளர் கருத்துக்கள் பல, குறிப்பால் மறுக்கப்பட்டுள்ளனவென்று யாமறிவேம்.

'தாயிற் சிறந்தன்று நாண்தைய லாருக்கந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் றோளிதன் கற்பின் விழுமிதன்றீங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடும்எங் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே.'

(திருக்கோவையார்)

'உழக்குமறை நாலினும் உயர்ந்துலகம் ஓதும்
வழக்கினும் மதிக்கவினி னும்மரபி னடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்.' (கம்பர்)

இந்தத் தெய்வத்தமிழ்வாக்குச் செய்யுட்களை மேற்கோளாக எடுத்துத் தமிழின் பெருமையையும் தொன்மையையும் விளக்கிய அப்புலவர் பெருந்தகையின் கருத்தையும் நன்கறிவேம்.

மறுப்புக்கள்.

1

குறிப்புரையாளர் முகவுரை பக்கம்—2-ல் 'இந்நூலில் உரைகாரர் அனைவரது கருத்துக்களும் என் சிற்றறிவுக்கு எட்டிய வரை ஆராயப்பட்டன' என்றார். ஈண்டு 'அனைவரது கருத்துக்களும்' என்பது ஆறும் வேற்றுமைத் தொடர். அனைவர் என்பது ஆறும் வேற்றுமை உருபேற்ற பெயர். கருத்துக்கள் என்பது அவ்வுருபேற்ற பெயர்க்கு முடிபாகப் பின்வரும் பெயர். முடிபாகப் பின்வரும் பெயர் எனினும் முடிக்கும் பெயர் எனினும் ஒக்கும். முடிக்கும் பெயர்ப்

பொருள் ஒருமைப் பாலானல் அங்கே அது என்னும் உருபு வருதற்குரியது; பன்மைப் பாலானல், அ என்னும் உருபு வருதற்குரியது. ஆது என்பதும் ஒருமைக்குரியது.

சாத்தன்றலை, சாத்தன் கை என்பன ஆறும் வேற்றுமைத் தொகை. இவற்றை விரிக்கும்வழி சாத்தனது தலை எனவும் சாத்தன கை எனவும் விரித்துரைத்தல் வேண்டும். இங்கே 'அனைவரது கருத்துக்களும்' என்னுமிடத்தில், கருத்துக்கள் என்னும் முடிக்கும் பெயர் பன்மைப்பாலது. ஆகவே அனைவர் என்பது பன்மைப் பொருண்மைக்குரிய அகரவுரு பேற்று அனைவர கருத்துக்துக்களும் என வரல்வேண்டும். அவ்வாறன்றி முடிக்குஞ் சொல்லின் ஒருமைப் பொருண்மைக்குரிய அது என்னும் உருபைக் கொடுத்து 'அனைவரது கருத்துக்களும்' என்று கூறியது வழுவாதல் அறிக. இங்ஙனம் ஆறும் வேற்றுமையில் முடிக்குஞ் சொல்லின் ஒருமைப் பொருண்மைக் குரிய உருபு இன்னதென்றும் பன்மைப் பொருண்மைக்குரிய உருபு இன்னதென்றும் குறிப்புரையாளர் தெரிந்து கொள்ளாமையால், அவர்க்கு 'ஆறனொருமைக்கு அதுவும் ஆதுவும், பன்மைக்கு அவ்வும் உருபாம்' என்று அவ்விலக்கணத்தை விளங்கக்கூறும் நன்னூலில் பயிற்சியில்லை போலும்.

தொல்காப்பியச் சொல்லதிகாரவுரை அத்தனையிலும் பயிற்சி யுடையார் என்று சொல்லிக்கொள்பவர், நன்னூலில் பயிலாமைக்கு அவர் அதனைச் சிறுநூல் என்று இகழ்ந்ததே காரணம் ஆகும். தொல்காப்பியத்தையும் நன்னூலையும் ஒருங்கே கற்றுணர்ந்தார்க்கன்றி (அவற்றுள் ஒரு நூலையே கற்றார்க்கு) இலக்கணப்புலமை நிரம்புமாறில்லையென அறிக.

தொல்காப்பியர் ஆறும் வேற்றுமைக்கு அது என்னும் உருபு ஒன்றனையே எடுத்தோதினர் அவர் நூல் தொகுத்துச் செய்த நூல் ஆகலின். அகரவுருபு பன்மைக்குரியதென்பதை அங்கே அவர் உத்தியால் கொள்ளும்படி வைத்தார். தொல் காப்பியச் சொல்லதிகார வுரையாசிரியர் பலரும் அவ்வகர

வுருபை யெடுத்து உதாரணத்துடன் காட்டியே முடித்தனர். ஆகவே அவ்வுரைகளினும் அவர்க்கு உய்த்துணர்வில்லைபோலும்.

'ஈசன சாந்தும் எருக்கும் அணிந்து' (கோவையார்-74) குடிக்கலர் கூறினும் கூறு வியன் தில்லைக் கூத்தன தாள் (ஷ 291) 'சம்பந்தன செந்தமிழ்' இவற்றுள் அகரம் ஆறன் பன்மை யுருபு. பேராசிரியரும் 'ஈசன சாந்தும்' என்புழி அகரம் பன்மை உருபென்று விளங்க உரைத்தார்.

உரைநடையில் 'அனைவர கருத்துக்களும்' என்று எழுதுதல் வழக்கன்று என்று கருதுவார், 'அவருடைய கருத்துக்களும்' என 'உடைய' என்னும் சொல்லுருபைக் கொடுத்தேனும், 'அனைவர் கருத்துக்களும்' எனத் தொகையாகவேனும் எழுதுதல் நன்று.

மறுப்பு 2

('பிழையும் திருத்தமும்' என்று குறியிடப்பட்ட பக்கத்தில்) 'சார்பு பொருளை' என்பது பிழையாகவும் 'சார்புப் பொருளை' என்பது திருத்தமாகவும் குறித்துள்ளார். இதனால் இவர் திருத்தமானதைப் பிழையென்றும் பிழையானதைத் திருத்தமென்றும் மயங்கிக்கொண்டார் ஆயினர்.

சார்பு என்பது இடைத் தொடர்க் குற்றியலுகரவீற்று மொழி. அது (நிலை மொழியாக) நின்று வல்லெழுத்து முதலிய வருமொழியோடு புணருமிடத்து, வேற்றுமை வழியினும் வல்லெழுத்து மிகாது; அல்வழியினும் வல்லெழுத்து மிகுதல் இல்லை.

'இடைத்தொடர் ஆய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை'
'வன்றொட ரல்லன முன்முகா அல்வழி' இவை நன்னூற் சூத்திரங்கள்.

'இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
நடையா யியல என்மனார் புலவர்'
'அல்லது கிளப்பின் எல்லா மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை யாகும்'
இவை தொல்காப்பியச் சூத்திரங்கள்.

இவ்விதிகளால் 'சார்பு பொருளே' என வல்லெழுத்து மிகாது வந்த சொற்றொடரே பிழையற்றதாம். இதனால் குறிப்புரையாளர் தாம் எழுத்தியலினும் நன்கு பயிலாமையை விளக்கினர் ஆயினர்.

மறுப்புக்கள் 3, 4

(சூ. 7. குறிப்புவரயில்) 'னஃகானொற்று-னகரத்தை ஈற்றிலுடைய சொல்.....................அவ்வாறு கூறுவது, னஃகானொற்று முதலியனவற்றை இருபெயரொட்டின்மேல் வந்த அன்மொழித் தொகையாகக் கொண்டதாலெனின், அற்றன்று, சாரைப் பாம்பு முதலிய பண்புத் தொகையினின்றும் அன்மொழித்தொகை பிறப்பது இயற்கையின்மையின் என்க' என்றார்.

இங்கே 'பண்புத் தொகையினின்றும்' என ஐந்தாம் வேற்றுமைத் தொடராகக் கூறியது முதற் பிழை. இருபெயரொட்டுப் பண்புத் தொகைப்புறத்தே அன்மொழித்தொகை வாராது என்றது இரண்டாவது பிழை.

தொல்காப்பியத்தில் அன்மொழித் தொகையின் இலக்கணம் கூறுவதாகிய

" பண்பு தொகவரூஉம் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர் வயினானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே '

என்னும் சூத்திரவுரையிலே, சேனவரையர் கூறியவாறு:—
'பண்புச் சொல் தொகும் சொல்லினும் உம்மை தொக்க பெயர்க் கண்ணும் வேற்றுமை தொக்க பெயர்க் கண்ணும் இறுதிச் சொற்கண் நின்று நடக்கும் அன்மொழித் தொகை எ-று- 'பண்புத் தொகைபடவும் உம்மைத் தொகைபடவும் வேற்றுமைத் தொகைபடவும் அச்சொல் தொக்கபின் அத்தொகை அன்மொழித்தொகை ஆகாமையின், தொகுவதன்முன் அவற்றிற்கு நிலைக்களமாகிய சொற்பற்றிவரும் என்பது விளக்கிய, தொகை வயினானும் என்னாது, பண்பு தொகவரூஉம் கிளவியானும் உம்மைதொக்க பெயர்வயினானும் வேற்றுமை தொக்க பெயர் வயினானும் என்றார்.'

'இறுதிச்சொல் படுத்தல் ஓசையால் பொருள் விளக்குமாறு வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் கண்டுகொள்க.'

'வெள்ளாடை, அகரவீறு என்பன பண்புத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித் தொகை. தகரஞாழல் என்பது உமமைத் தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. பொற்றொடி என்பது வேற்றுமைத் தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை...........என்பது.

இனி, வடமொழியிலே இயற்றப்பட்ட 'பிரயோகவிவேகம்' என்னும் நூலின்படியே தமிழிலே பிரயோகவிவேகம் என நூல் இயற்றிய சுப்பிரமணிய தீக்கிதர் என்பவரும், 24-வது கலித்துறையுரையிலே, 'அன்மொழிப் பொருளடைந்து எனவே அன்மொழியை அடையாமல் அதன்பொருளை அடைந்தபின் இருமொழியும் பன்மொழியும் தொகும்' எனக்கூறி, மேற்குறித்த சேனாவரையர் உரைமுற்றும் அப்படியே எழுதிக் கரிபோக்கினார்.

இலக்கணம் தருக்கம் சாத்திரம் என்னும் நூற்கடல்களின் ஆழங்கண்டு எறிய சிவஞானமுனிவரும், முதற்சூத்திரவிருத்தியிலே 'அகரமுதல்' 'னகர விறுவாய்' என்பனவற்றிற்கு இலக்கணமுடிபு கூறுகின்றவிடத்திலே, 'அகரமுதல் னகரவிறுவாய்' என்பன பண்புத் தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை'

பண்புத்தொகைப் பொருள்படத் தொக்கவழி அஃது அன்மொழித்தொகை ஆகாமையின் பண்புத்தொகையிற் பிறந்த அன்மொழித்தொகை என்னாது பண்புத்தொகைக்கு நிலைக்களமாகிய சொல்லிற் பிறந்த தொகை என்பது விளக்கிய, தொல்லாசிரியரெல்லாம் பண்புத் தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகையென வழங்கியவாறு'

'அகரம் னகரம் என்பன பண்பல்லவாயினும், பண்புத்தொகைபோல விசேடிப்பதும் விசேடிக்கப்படுவதும் ஆகிய இயைபுபற்றி, இன்னோரன்னவையும் பண்புத்தொகை எனப்பட்டன.'

'அற்றேல், தொக்க இருமொழிப்பொருளும் தாராது புறமொழிப் பொருளைத் தருவது அன்மொழித்தொகை ஆகவின், அகரமுதல் னகரவிறுவாய் என்புழி அன்மொழித் தொகையான் அகரமும் னகரமும் ஒழித்து ஒழிந்த இருபத் தெட்டுமே கொள்ளப்படும், அவ்வாறன்றி அவற்றையும் உடன் எண்ணி முப்பஃது என்றல் நிரம்பாதாம்பிற எனின் :—ஆகு பெயர் விட்டவாகுபெயரும் விடாதவாகுபெயருமென இருவகை ஆயவாறுபோல, அன்மொழித்தொகையும் விட்டஅன்மொழித் தொகையும் விடாதஅன்மொழித் தொகையுமென இருவகைப் படும். 'அவற்றுள் இது விடாதஅன்மொழித்தொகை ஆகலின் நிரம்பும் என்க.'

'அகரவீறு புள்ளியீற்றுமுன் என்றாற்போல்வனவும் அவை. பொற்றொடிபுகன்றாள் ஒண்ணுதல் உண்டாள் என்பன விட்ட அன்மொழித்தொகை.'

என்று அவ்விலக்கணத்தை விளங்கக் கூறினர். ஆகவே, சேனாவரையர் பிரயோகவிவேகநூலார் சிவஞானமுனிவர் ஆகிய இம்மூவரும் அன்மொழித்தொகையிலக்கணத்தைப்பற்றி ஒத்த கருத்தினராய் எடுத்துக்காட்டியவாறு அறிக.

இனித், தொகைநிலைத்தொடரின் பொதுவிலக்கணம்பற்றிக் கருத்து வேறுபட்ட நச்சினார்க்கினியரும், அன்மொழித்தொகை இயல்பைப்பற்றிய 'பண்பு தொகவரூஉங் கிளவி யானும்' என்னும் அச்சூத்திரவுரையிலே, 'முன்னர் அன்மொழியான் உணரும் பொருள்களை மனத்தால் உணர்ந்துதான் பின்னர்ப் பண்புத்தொகை முதலியவற்றால் கூறக்கருதியவழி அத்தொகைகளின் இறுதிச்சொற்கள் எழுந்து படுத்தலோசையால் அத் தொகைச்சொல் தோன்றிப் பொருள்விளக்குதலின் ஈற்று நின்றியலும் என்றார்' எனக் கூறினர். ஆதலால் அவரது கருத்தும் சேனாவரையர் கருத்தை ஒட்டியதேயாம்.

'ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி' என்று சூத்திரம் செய்த நன்னூலார் கருத்தும் அதுவேயாம். நன்னூலார்க்கு இதுபற்றிக் கருத்துவேறும் என்பார் மதம் பற்றி ஈண்டு

உரைக்கப்புகின் மிகவிரியும். தொகையிலக்கணம்பற்றி மேலே உரைநிகழுமிடத்து அதனை விளங்க உரைப்பாம். அதுகிடக்க.

'தொகையின் நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித் தொகை' எனினும் 'தொகையின் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை' எனினும் பொருளால் ஒக்கும்.

'மக்கட் சுட்டு' - பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை யென்றார் சேனாவரையர்.

'அரன்மபலத்தியல்' (கோவையார் 35) ஆறும்வேற்று மைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை என்றார் பேராசிரியர்.

'தொடலைக்குறுந்தொடி' (குறள்.) உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை என்றார் பரிமேலழகர்.

ஆகவே, எந்த உரையாசிரியரும் குறிப்புரையாளர் 'சாரைப்பாம்பு முதலிய (இருபெயரொட்டுப்) பண்புத்தொகை யினின்றும் அன்மொழித்தொகை பிறப்பது இயற்கையன்மை யின்' என்றாற்போல ஐந்தாம்வேற்றுமைப் பொருள்படக் கூறுமை கண்டுகொள்க.

இனி, 'இருபெயரொட்டுப் பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை வாராது' என்றதற்கு மறுப்பு வருமாறு.

'பண்பு தொகவரூஉம் கிளவி யானும்' என்னும் அன் மொழித் தொகைச்சூத்திரவுரையிற்றானே, சேனாவரையர் பண்புத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித் தொகைக்கு 'வெள்ளாடை' 'அகரவீறு' என்று இரண்டு உதாரணங்களை எடுத்துக்காட்டி, 'வெள்ளாடையை உடுத்தாள்' 'அகரமாகிய ஈற்றையுடைய சொல்' என அவ்வன்மொழித் தொகைகள் விரியுமாறும் உணர்த்தினர். இவ்வுதாரணங்களுள் 'அகரவீறு' என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்கே உதாரணமாதல் 'வண்ணத்தின் வடிவின்' என்னும் பண்புத்தொகையிலக்கணச் சூத்திரவுரையாலும் உய்த்துணர்ந்து கொள்ளப்படும்.

சேனாவரையர் உரையின்படியே எடுத்தெழுதிய பிரயோக விவேக நூலார்க்கும் 'அகரவீறு' என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை யென்பதே கருத்தாம்.

'அகரமுதல்' 'னகரவிறுவாய்' என்பன பண்புத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை யெனக் குறித்த சிவஞான முனிவர்க்கும் அவையும் அவற்றிற்கு எடுத்துக் காட்டிய அகரவீறு 'புள்ளியீற்றுமுன்' என்பனவும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை யென்பதே கருத்தாம்.

இனிக், 'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்' என்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையென்ற நச்சினார்க்கினியருக்கும் அதுவே கருத்தாதல் தெளிந்துகொள்க.

இதனால் இருபெயரொட்டுப் பண்புத்தொகைப்புறத்து அன்மொழித்தொகை வாராதென்னும் குறிப்புரையாளர் கொள்கை பிழையாதல் அறிக. இதனால் அவர் தமக்குத் தொகையிலக்கண வாராய்ச்சியிலும் தெளிவின்மையை விளக்கினா ராயினார்.

மறுப்பு 5.

(முகவுரை பக்கம்-1) 'திருச்சிராப்பள்ளி காலேஜில் படிக்கும் பி. ஏ. வகுப்பு மாணவர்க்கு கால்ட்வெல்துரை எழுதிய திராவிட பாஷையிலக்கணம் கற்பிக்க முதன்முதல் 1919-ம் வருஷத்தில் எனக்கு நேர்ந்தது' என்று கூறினார்.

இந்த உரைநடையானது தமிழ்மொழி உரைநடையே அன்று. ஆங்கிலமொழி உரைநடையை மேற்கொண்டதேயாம். 'நேர்ந்தது' என்பது வினைமுற்றுப்பயனிலையன்றோ? அதற்கு இங்கே எழுவாய் இல்லை. எழுவாயை அவாய்நிலை என்னும் இலக்கணத்தால் வருவித்து முடிக்கலாம் எனின், அவாய் நிலைக்கு எதுவொன்றும் காணோம். அவாய்நிலை யில்வழியும்

சொல்லெச்சம் என்பதனால் அதனை வருவித்து முடிக்கலாம் எனின், உரைநடையில் சொல்லெச்சத்தைத் தேடி இடர்ப்பட வேண்டுவது எற்றுக்கோ?

அப்படி வேண்டினும், 'நேர்ந்தது' என்பதற்கு 'காலம்' 'அமையம்', 'இடம்' என்றாற்போலும் ஓர் சொல்லை வருவித்து முடித்தல் வேண்டும். அப்படி முடிக்குமிடத்திலும் மற்றோர் இடருண்டாம். இங்கே 'கற்பிக்க' என்பது 'குளம் நிறைய மழை பொழிந்தது' 'நோய்தீர மருந்துண்டான்' என்புழி 'நிறைய' 'தீர' என்பனபோலக் காரியப்பொருண்மையில் வந்த செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். 'நேர்ந்தது' என்பது பிறகர்த்தாவின்வினை. கற்பிக்க என்பதில் கற்றல் வினைக்கு வினைமுதல் யான் என்பதை வருவித்து முடித்தல் வேண்டும். ஆகவே 'யான் கற்பிக்க எனக்கு அமையம் நேர்ந்தது' என முடியும். முடியின் 'எனக்கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபேற்ற பெயர்ச்சொல் மிகைபடக்கூறலின் பாற்பட்டுப் பொருளொடு பொருந்தாமை கண்டுகொள்க.

'திரிசிரன்' என்னும் அரக்கன் வழிபட்ட காரணத்தால் 'திரிசிராப்பள்ளி' யென்று நகருக்குப் பெயர் வந்தது அறியாதார் 'திருச்சிராப்பள்ளி' யென்று வழங்குவஃது தவறுதல் அறிக.

6. (முகவுரை பக்கம்-1) '1926-ம் வருடம் சென்னைத் தமிழ் லெக்ஸிகன் ஆபீஸுக்கு உதவிப்பத்திராசிரியராகச் செல்ல நேர்ந்தது.' என்றார்.

இதுவும் ஆங்கில மொழிநடையே. 'செல்ல' என்னும் காரியப்பொருண்மையில் வந்த செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் நேர்ந்தது என்னும் பிறவினைமுதல் வினையால் முடிந்துளது. நேர்ந்தது என்பதற்கு வினைமுதல் தேடவேண்டியதாயிற்று. மேலே ஐந்தாவது மறுப்புரையில் கண்டவாறு ஓர்சொல்லை வருவித்து முடிப்பினும் அது பொருளொடு பொருந்தாமை அறிக.

இனி, அவர் 'கொள்ளப்படாது மறப்பது அறிவிலென் கூற்றுக்களே.' 'முகத்தின்று வஞ்சரை அஞ்சப்படும்.' கற்றோரைத் தலைநிலத்து வைக்கப்படும்.' என்னுமிடங்களிலே, 'கொள்ள' 'அஞ்ச' 'வைக்க' என்பனவற்றைப் பிரித்துக், 'கொள்ளல்' 'அஞ்சல்' 'வைத்தல்; எனத் தொழிற்பெயராக்கி முடிக்கலாம் என்ற பிரயோகவிவேகநூலாரைத் துணையாகப் பற்றினும், அது மட்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையேயாகும் என்க. 'ஆபீசுக்கு யான் செலல் நேர்ந்தது' என்பது தமிழ் உரைநடையன்றெனத் தெளிக.

7. (முகவுரை பக்கம்-1) 'மூ. இராகவையங்கார், மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் இவ்விருவர்களுடன் ஆராய்ந்து ....வெளியிட்டேன்.' என்றார்.

'இவ்விருவர்களுடனும் ஆராய்ந்து' என உம்மை கொடுத்துச் சொல்லல்வேண்டும் என்னும் இலக்கணவிதியை மறந்தார் போலும்.

> 'இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவி
> வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்.'
> (தொல்காப்பியம்)

> 'இனைத்தென் றறிபொருள் உலகி னிலாப்பொருள்
> வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும்.' (நன்னூல்)

8. (முகவுரை பக்கம்-1) 'இளம்பூரணம் சேனவரையம் நச்சினர்க்கினியம் இம்மூன்று 'உரைகளிலுள்ள' விஷயங்களே ஆராயப்பட்டன' என்றார்.

இங்கும் 7-வது மறுப்பில் கண்ட பிழையையே செய்தனர். 'உரைகளிலும் உள்ள' என உம்மை கொடுத்து எழுதல் வேண்டும் என்க.

9. (முகவுரை பக்கம்-1.) 'தெய்வச்சிலையார் உரையை மகாமகோபாத்தியாய சாமிநாதையர் அவர்கள் அன்புடன் (எனக்குக்) கொடுத்தனர்' என்றார்.

செல்லுதல் வருதல் தருதல் கொடுத்தல் என்னும் தொழி லடியாகப் பிறக்கும் சொற்களுள்ளே, இடையிற் குறித்த இரண்டு சொல்லும் தன்மையிடத்தும் முன்னிலையிடத்தும் வருமென்றும், மற்றையிரண்டு சொற்களும் படர்க்கையிடத்து வருமென்றும் விதித்தார் தொல்காப்பியனர். அதனைச்

'செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யெனு மும்
அம்மூ விடத்தும் உரிய வென்ப'
'அவற்றுள், தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீரிடத்த'
'ஏனை யிரண்டும் ஏனை யிடத்த.' என்னும்

சூத்திரங்களால் அறியலாம்.

எனவே 'எனக்குத் தந்தார்' என்பதும் 'அவனுக்குக் கொடுத்தார் என்பதுமே இலக்கண முறையாம்.

'எனக்குக் கொடுத்தார்' அவனுக்குத் தந்தார்' என்னின் வழுவாம். ஆகவே இங்கு 'எனக்குக் கொடுத்தார்' என்று எழுதியது வழுவாதல் அறிக.

கடைச்சங்கத்தார் காலத்திலே, அத்தொல்காப்பியச் சூத் திரங்களின் கருத்தைப் பிறழ உணர்ந்ததனுற் போலும்

'பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த.'
'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது' எனத்தருதல், வருதல் என்னும் சொற்கள் படர்க்கைக்கண்ணும் செய்யுளில் வந்தன. நன்னூலார் அது கருதி'

'தரல்வரல் கொடை செலல் சாரும் படர்க்கை
எழுவா யிரண்டும் எஞ்சிய ஏற்கும்' எனச் சூத்திரம்

செய்தார். தரல் வரல் கொடை செலல் இவை நான்கும் படர்க் கைக்கண்ணும், தரல் வரல் இவ்விரண்டும் தன்மைக்கண்ணும் முன்னிலைக்கண்ணும் வரும் எனவே, கொடை செலல் இவ்விரண் டும் தன்மையினும் முன்னிலையினும் வாரா எனக்குறிப்பித்தார். நன்னூலார்க்குப் பின்வந்த நச்சினர்க்கினியார்

'வையத்தும் வானத்தும் செல்லா தணங்காகி
ஐயத்து நின்ற தரா' என்னும் ஓர் பிற்காலச்செய்யுளைக்

கண்டு செல்லுதலும் தன்மைக்கண் வருமெனக் காட்டினர். ஆகவே இவை இடவழுவமைதியென்று பிற்காலத்து உரையாசிரியர்கள் கொண்டு, தருதல் வருதல் செல்லல் இவற்றை ஒப்பக் கொடுத்தல் என்பதும் தன்மைக்கண்வரும், ஆகவே எல்லாச் சொல்லும் எல்லாவிடத்தும் வரும் என்றும், பிற்கால வழக்கில் வந்தன இடவழுவமைதி யென்றும் கூறினர். அது ஆசிரியர் தொல்காப்பியனர்க்குக் கருத்தன்றென்க. இன்னும் இதுபற்றி விரித்துரைப்பின் பெருகும் ஆதலின் அமைக.

அஃது எற்றுயினும், தொல்காப்பியச் சொல்லதிகாரவுரைகள் பலவற்றையும் ஆராய்ச்சி செய்வான் எடுத்துக்கொண்டவர், வழாஅநிலையாகிய அரண்மனையிலே வீற்றிருப்பதைத் தவிர்த்து வழுவமைதி என்னும் பூழையிற் புகுவது எற்றுக்கு?

செய்யுளிலே வழுவமைதியாகச் சொற்கள் வரினும் உரையாளர் கடமை வழாநிலைச் சொல்லாற் கூறுதலேயாம்.

'செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்'
(குறற்) என்புழியும்

'மனநல மன்னுயிர்க்காக்கம் இனநலம் எல்லாப்புகழும்
தரும்' (குறள்)

என்புழியும் வருதலும் தருதலும் முறையே வழுவமைதியென்று குறித்த பரிமேலழகர் வழாநிலைச்சொல்லால் உரை விரித்தவாறு காண்க.

இனிச் சேனவரையொழிந்த உரையாசிரியர்கள் கூறியவாறே அந்நான்கு சொல்லும் மூன்றிடத்தும் வரலாமெனக் கொண்டால் 'செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்' என்னும் சூத்திரம் ஒன்றே அமையும். அவற்றுள் தருசொல் வருசொல் ஆயிருகிளவியும் தன்மை முன்னிலை ஆயிரிடத்த, 'ஏனையிரண்டும் ஏனையிடத்த' என்னும் ஏனையிரண்டு சூத்திரங்களும் வெற்றெனத் தொடுத்தலாய் முடியுமாறு அறிக.

வடமொழிக் கடலும் தென்மொழிக் கடலும் நிலைகண்டுணர்ந்தவரென்று சிவஞான முனிவரால் போற்றப்பட்ட சேனாவரையர், மேற்குறித்த மூன்று சூத்திரங்களுக்கும் அச்சூத்திரங்களோடு தொடர்புடைய

'கொடுவென் கிளவி படர்க்கை ஆயினும்
தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பின்
தன்னிடத் தியலும் என்மனார் புலவர்?' என்னும்

எச்சவியற் சூத்திரத்துக்கும் எழுதிவைத்த உரையை உய்த்துணர வல்லார்க்கு, உண்மைப் பொருள் கண்டு தேறுவதில் இடர்ப்பாடு உண்டாகாது. அந்நான்கு சொல்லும் மூன்றிடத்தும் வருமென அவர் (சேனாவரையர்) கொண்டாரிலர். 'பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த' 'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது' என்று சங்க விலக்கியங்களிலே வழங்கலுற்றதைக்கண்டு, தன்மை இடத்திற்கும் முன்னிலையிடத்திற்கும் உரியனவாகிய தருதல் வருதல் என்னும் இரண்டு சொல்லும் படர்க்கையிடத்தினும் வருமென்று கூறி வழுமைத்ததனோடு நின்றனர், ஏனைச் 'செல்லுதல்' கொடுத்தல், என்னும் சொற்கள் பற்றி, அவர் அவை படர்க்கையிடத்திற்கே உரியவாய் வருமென்று கூறி, 'அவன்கட் சென்றான்' 'அவற்குக் கொடுத்தான்.' என்றே உதாரணம் காட்டினர். 'எனக்குக் கொடுத்தான்' 'என்கட் சென்றான்' 'உனக்குக் கொடுத்தான்' உன்கட் சென்றான் என்று உதாரணம் காட்டி வழுவமைக்கவில்லை. அவ்வாறு கூறின், வழுவாம் என்பதே அவர்க்குக் கருத்தென்பது 'செலவினும் வரவினும்' என்னும் சூத்திரவுரையுள், அஃதேல் 'போதல்' 'புகுதல்' என்னும் தொடக்கத்தனவும் இடஞ் சுட்டுதலின் நான்கென்னும் வரையறை அமையாதெனின், அவை இக்காலத்துப் பயின்று வருமாயினும் மூன்றிடத்திற்கும் பொதுவாகலினன்றே, ஆசிரியர் அந்நாற்சொல்லுமென இவற்றையே வரைந்தோதுவாராயிற்றென்பது' என்று உரைத்தது கொண்டும், 'தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்' என்னும் சூத்திரவுரையுள்ளே, 'அஃதேல் படர்க்கைச் சொல் மயக்கமும் எய்துமால் எனின், அஃது எச்சவியலுள் பெறப்படுதலின், ஈண்டுக்கொள்ளப்படாது'

என்று உரைத்தது கொண்டும், 'கொடுவென் கிளவி படர்க்கை ஆயினும்' என்னும் சூத்திரத்திற்குக் கொடு என்னும் சொல் முதனிலைவகையால் படர்க்கை ஆயினும், தன்னைப் பிறனொருவன் போலக் கூறும் கருத்துவகையால், தன்னிடத்துச் செல்லும்' என்று உரை கூறியது கொண்டும் நன்கு துணியப்படும்.

'கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்
தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பின்
தன்னிடத் தியலும் என்மனார் புலவர்.' என்னும்

சூத்திரத்திற்குச் சேனாவரையர் உரைத்த உரையே பொருத்தமானது. அவர் தமக்கு முற்பட்ட இளம்பூரணரால் அச்சூத்திரத்திற்குக் காணப்பட்ட உரையை மயக்கவுரையென்று மறுத்தார். சேனாவரையருடைய ஆழ்ந்த ஆராய்ச்சித் திறனை உள்ளவாறு உணரலாற்றாத நச்சினார்க்கினியர், 'கரும்பிருக்க இரும்புகடித்து எய்த்தார்' 'போலவும் விளக்கங்கிருப்ப மின்மினி கவரும் அளப்பரும் சிறப்பில் ஆதர்' போலவும் புயலைப் பற்றும் அப்பொங்கரி (சிங்கம்) போக்கி ஓர் முயலைப் பற்றினரைப் போலவும் அச்சேனாவரையர் உரையை மறுத்து இளம்பூரணர் உரையைத்தழுவி அதனையே நிலைப்படுத்தக் கருதினர். இதனாலும், 'இவர் (நச்சினார்க்கினியர்) யாம் பிடித்ததே சாதிப்பேம் என்னும் கருத்தால் யாண்டும் மயங்குவர்' என்று சிவஞானமுனிவர் கடிவதற்கு உரியராயினர் என்பது தெளியப்படும்.

'கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்' என்னும் சூத்திரம் 'ஆடி நிழலின் அறியத் தோன்றி, நாடுத லின்றிப் பொருள்நனி விளங்க' யாத்தமைக்கப்பட்டுள்ளது. சேனாவரையர் கூறிய செம்பொருளில் ஒன்று மட்டும் விளக்கவேண்டியுள்ளது. அது 'தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பின் தன்னிடத்தியலும்' என்பது. ஆகவே அச்சூத்திரத்தின் பொருளை விளங்க உரைக்குமாறு:—

'கொடுத்தல்' என்னும் சொல் 'அவனுக்குக் கொடுத்தான்' எனப் படர்க்கையிடத்திற்கு உரியதாய் வருமென்பது 'ஏனைக் கிளவி யேனை யிடத்த' என்னும் சூத்திரத்தால் உணர்த்தப்

பட்டதாயினும், அது தன்மையிடத்திற்கும் உரியதாய் வரும் இடனும் உண்டு; எவ்விடத்தென்றால், உயர்ந்தோன் இழிந்தோனை நோக்கி, ஒரு பொருளைக் கொடுக்கும்படி வேண்டுவான் 'எனக்குக்கொடு' என்னும் வாய்ப்பாட்டை ஒழித்துத், 'தன்னைப்பிறன்போற் கூறுதல்' என்னும் குறிப்பு நிலையில் 'இவனுக்கு இப்பொருளைக்கொடு என்பான் அன்றே, அந்தவிடத்தில் எ-று. 'தன்னைப் பிறன்போற் கூறுதல்' என்னும் இலக்கணத்தைத் 'தன்மைப் படர்க்கை' என்பது உரையாசிரியர் வழக்கு. அஃதாவது தன்மைப் பொருளில் வரும் படர்க்கைச் சொல் என்பது.

படர்க்கைச் சொல் தன்மைப் பொருளில் வருவதுபோல முன்னிலைப் பொருளிலும் வரும். அதற்கு 'முன்னிலைப் படர்க்கை' யென்று பெயர்.

'குன்றகத் தில்லாத் தழைஅண்ணல் தந்தால் கொடிச்சியருக்கு' (கோவையார் 92) இதிலே அண்ணல் என்பது முன்னிலைப் படர்க்கை. கொடிச்சியர் என்பது தன்மைப்படர்க்கை. 'அண்ணல்' என்பதற்கு நீ யெனவும் 'கொடிச்சியருக்கு' என்பதற்கு எமக்கு எனவும் பொருள் படுத்திக் கொள்ள வேண்டும்.

'என்னோ வள்ளல் உள்ளம் துயர்கின்றதே' (கோவையார்-24) வள்ளல் முன்னிலைக்கண் வந்தது.

'செருமிகு சேஎய்நிற் பாடுநர் கையே' (புறம் 14) பாடுநர் எனத் தன்மைப் படர்க்கையாகக் கூறினர்.

'பாணர்க்கு, அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன்' (புறம் 34) தம்மைப் பிறர்போலக் கூறினர்.

'பாடுதல் விறலியர் கோதையும் புனைக' (புறம் 172.) விறலியர் முன்னிலைக்கண் வந்தது.

'தேறியார்க் குண்டோ தவறு' தேறிய எமக்கு உண்டோ தவறு எனப் பொருளாதலால் தன்மைப் படர்க்கை.

'சாத்தன்தாய் இவை செய்வலோ? சாத்தனுக்குத் தாயாகிய நான் இச்செய்யப்படாத காரியங்களைச் செய்வேனோ? என்று பொருள்படலால் தன்மைப்படர்க்கை. 'கல்வியன் என்னும் வல்லாண்—சிறாஅன் ஒல்வே னல்லன் அது வாயா குதல்' (புறம் 346) என்பதும் அது.'

'எம்பியை ஈங்குப்பெற்றேன் என்னெனக் கரியதென்றான்.' (சிந்தாமணி) உன்னைப்பெற்றேன் என முன்னிலைப்படர்க்கை.

'நாம் அரையாமத் தென்னோ வந்து வைகி நயந்ததுவே' (கோவையார் 164) ஈண்டு நாம் என்னும் உளப்பாட்டுத்தன்மை உயர்புதோன்ற முன்னிலைக்கண்வந்தது. எனவே இது முன்னிலைத்தன்மை வழுவமைதி. இக்காட்டிய உதாரணங்களால் தன்மைப்படர்க்கை இன்னதென்பதும் முன்னிலைப்படர்க்கை இன்னதென்பதும் முன்னிலைத்தன்மை இன்னதென்பதும் தெரிந்துகொள்வதோடு 'கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்' என்னும் சூத்திரத்திற் குறிக்கப்பட்ட தன்மைப்படர்க்கையியல்பும் செவ்வன் உணர்ந்து கொள்ளலாம். கொள்ளவே அச்சூத்திரத்தின் கருத்து இனிது விளங்கும்.

அரசன் ஒருவன், தன் நாட்டில் உள்ளான் ஒருவனை நோக்கி, 'உன் அரசனுக்குரிய திறையைக் கொடுக்க' என்பானேல் அவன் கருத்து தனக்குரிய திறையைக் கொடுக்கவேண்டும் என்பதே. எனக்குக்கொடு என்றால் 'ஏனையிரண்டும் ஏனையிடத்த' என்னும் சூத்திரக்கருத்தின்படி வழுவாம். உன் அரசனுக்குக் கொடு என அவனே கூறினும் அது தன்மைக்கண் வந்து சேரலின் 'கொடுவென்கிளவி படர்க்கையாயினும்' என்னும் சூத்திரம் படர்க்கை வழுவமைப்பதாயிற்று.

ஒருவன் தன் மகனை நோக்கி, 'உன் தந்தைக்குப் புகழைக் கொடுக்க' என்பதும், தாய் தன்மகனை நோக்கி 'உன் தாய்க்குச் சோறு கொடுக்க' என்பதும் அது.

எனவே எவ்வாற்றானும் 'எனக்குக் கொடுத்தார் என்பது வழுவாதல் துணிந்து கொள்க.

இனி, 'உயந்தான் ஒருவன் தமன் ஒருவனைக்காட்டி இவற்குக்கொடு என்னும்' என்பதைக்கொடுவென் கிளவி படர்க்கையாயினும்' என்னும் சூத்திரம் அமைக்க வந்தது' என்னும் இளம்பூரணர் உரையைச் சேனாவரையர் மறுத்து, ஆண்டு இவன் என்னும் கிளவி வருதல் வழாநிலையே என்று கூறினார்.

அதனை உய்த்துணரும் ஆற்றலில்லாத நச்சினார்க்கினியார் சேனாவரையரை வெற்றுரைகளால் மறுத்து, இளம்பூரணர் உரைத்ததனையே சாதிக்க முயன்றார். அவர் அதனால் 'வீழ்வார்க்கு வீழ்வார்துணை' என்பதாயினார். அவர் அவ்விடத்தில் மட்டும் தவறினாரல்லர்.

'இவன் யார் என்குவை ஆயின்' என்னும் புறப்பாட்டிலே, சேரனை முன்னிலையாக்கி முடமோசியார் கூறுகின்ற காலத்து, இவன் என்பது முன்னிலைப்படர்க்கையாய் வந்தது என்று நச்சினார்க்கினியர் 'செய்யுண் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்' என்னும் சூத்திரவுரையுட் கூறினார். அப்புறப் பாட்டில் 'இவன்' என்று சுட்டப்பட்டவன் சோழன் முடித்தலைக் கோப் பெருநற் கிள்ளி என்பவன். சொல்கின்றவர் முடமோசியார், அவர்க்கு முன்னிற்பவன் சேரனே. பெருநற்கிள்ளி படர்க்கையிடத்தானே. ஆகவே படர்க்கையிடத்துக்குரியானைப் படர்க்கையிடத்திற்குரிய இவன் என்னும் சொல்லால் சுட்டியது இலக்கண நெறியேயாம். நச்சினார்க்கினியார் இவன் என்பது முன்னிலைப் படர்க்கை யென்னும் இடவழுவமைதியாகக் கொண்டு எடுத்துக் காட்டியது முன்னிலைக்கும் படர்க்கைக்கும் இடையிலுள்ள வேற்றுமையை உணராமையேயாம்.

இனிக், குறிப்புரையாளர் மேற்கண்ட 'செலவினும் வரவினும்' முதலிய கிளவியாக்கச் சூத்திரங்களுக்கும் 'கொடுவென்கிளவி படர்க்கையாயினும்' என்னும் எச்சவியற் சூத்திரத்திற்கும் எழுதிய குறிப்புரையிலே நச்சினார்க்கினியர் உரையொடு சாய்ந்தார் ஆகலின், அவர் ஆண்டு உரைத்த உரைக் குறிப்புகளும் இத்துணையும் கூறியவற்றால் மறுக்கப்பட்டவாறு அறிக.

மறுப்பு 10.

(முகவுரை பக்கம்-2) இவ்வாராய்ச்சியில் கூறப்பட்டன அனைத்தும் குற்றமில் கூற்று என்ற எண்ணம் எனக்கு ஒரு போதும் இல்லை என்றார்.

இதுவும் தமிழ் உரை நடையன்று. ஆங்கிலமொழி நடையே. எனக்கு என்னும் நான்காம் வேற்றுமைக்குப் பொருட்டொடர்புடைய முடிபில்லை. வேற்றுமை மயக்கமென்ப தற்கும் இடமில்லை. 'குற்றமில் கூற்றென்பது என் கருத் தன்று' என்பது உரைநடை.

மறுப்பு 11.

(முகவுரை பக்கம்-2) 'குற்றங்களைக் காரணங்களுடன் அறிவிக்கும் புலவர்களிடம் எப்போதும் நன்றியோடிருப்பேன்.' என்றார். இதுவும் தமிழ்உரை நடையன்று. புலவர்களிடம் இவர் இருப்பது எப்படி? இனி இதனைப் புனைந்துரையாகக் கொள்ளலாம் எனின், அதுவும் குறிப்புரையாளர் கருத்தன்று.

மறுப்பு 12.

(முகவுரை பக்கம்-2) 'எழுத்ததிகாரச் சூத்திரங்களாலும் சொல்லதிகாரச் சூத்திரங்களாலும் யான் அறிந்த விஷயங்களை இம்முகவுரையின் சுருக்கமாக எழுதலாமென்று எனக்குத் தோற்றுகின்றது.' என்றார். தோன்றுகின்றது என்பதற்கு எழு வாய் என்னையோ? இதுவும் தமிழ்உரை நடையன்று. ஆங்கில மொழி நடையே. இவ்வகையான பிழைகள் குறிப்புரையில் காணப்படுவன கணக்கிறந்தனவாம்.

மறுப்பு 13.

(முகவுரை பக்கம் 1-2) 'சார்பெழுத்து முதலியவற்றைப் பற்றிய விஷயங்கள்.' 'எனக்குத் தோன்றிய விஷயங்களை' 'சொல்லதிகாரத்தில் உள்ள விஷயங்களை.' 'இம்மூன்று உரை

களிலுள்ள விஷயங்களே' 'அவ்விரண்டிலுமுள்ள விஷயங்களை' 'அவ்விஷயங்கள் ஒரு புத்தகத்தில்.' 'அறிந்த விஷயங்களை' என இரண்டு பக்கங்களுள் எழு இடத்தில் விஷயம் என்னும் வடசொல்லை வழங்கினர். அப்படியானல் குறிப்புரைப் புத்தகம் முழுதும் எத்தனையிடங்களில் அவ்வடசொல் வழங்கப்பட்டிருக்குமோ? அவற்றை எண்ணிக்கொள்க. தொல்காப்பியர் முதலிய நூலாசிரியர் பாலும் உரையாசிரியர் பாலும் பத்தி கொண்டிருத்தலே தம்முடைய கருத்தென்று முகவுரை 2-ம் பக்கத்திலே எழுதிய குறிப்புரையாளர்,

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே' என்னும்

சூத்திரத்தால் தொல்காப்பியனர், வடசொற்களைத் தமிழ் நூலில் வழங்கவேண்டின், அவைகளைத் தமிழ்க்குரிய எழுத்தில் (தற்பவமாக) வழங்கல் வேண்டுமேயன்றி வடவெழுத்தோடு புணர்த்தி வழங்கலாகாதென்று மறுத்திருப்பதையும், உரையாசிரியர்கள் வடபாடை விடம் இடபம் என உதாரணங் காட்டி விளக்கியிருப்பதையும், குறிக்கொள்ளாது வடவெழுத்தொடு புணர்த்தி எழுதியது உய்தியில்லதோர் குற்றமாம்.

விஷயம் என்னும் வடமொழிக்கு நேரான பொருளுள்ள தமிழ்மொழி உளதென்றே அவர் அறியார்போலும்.

இங்ஙனம் ஆங்கிலமொழி நடையையும் வடமொழி நடையையும் விடமாட்டாதார்க்குத் தமிழ்ப் பேரிலக்கணவாராய்ச்சி எற்றுக்கோ?

'யோசனையோர் கேட்ப' என்று நாலடியாரிலும், ராசமாபுரி என்று சிந்தாமணியிலும், வடமொழிகள் தமிழ்க்குரிய எழுத்தில் திரித்து வழங்கப்பட்டனவேயன்றி, வடவெழுத்திலே வழங்கப் படாமை காண்க. தமிழ் இலக்கண விலக்கிய வுரைகாரர் எவரும் வடசிறப்பெழுத்தைச் சேர்த்து எழுதாமையும் காண்க.

பிரயோக விவேகநூலார் 'விடயம் உரிமை விளம்புங்காலே.' என்றார். சிவஞான முனிவரும் 'உடல்பொறி விடயம் அனைத்தினையும்' 'புலன்கள்—ஐம்பொறிகளால் தரப்பட்டுப் புறத்தே நிலைபெற்ற விடயங்களாம். என்றார் (சிவஞான போதவுரை)

இனிக் 'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே' என்னும் சூத்திரத்தால் 'புதியன புகுதலும்' வழுவன்றே, அதுகொண்டு வடவெழுத்து மொழிகளைத் திரிக்காமலே வழங்கலாமென்பது குறிப்புரையாளர் கருத்தெனின், 'புதியன புணர்த்தல் பழைய வற்றோடு முரணாத வழியேயாம்' என்று சிவஞான முனிவர் பாயிர விருத்தியுட் கூறியதனை அவர் அறியார் போலும். இது புதியன புணர்த்தலாக மேல் வருவனவற்றிற்கும் ஒக்கும்.

மறுப்பு 14.

(முகவுரை பக்கம்-3.) 'மேலும் அவருக்கு முன்னர்த் தமிழ் இலக்கணவாசிரியர் பலர் இருந்திருத்தல் வேண்டும் என்பது நன்கு விளங்கும்' என்றார்.

'இருந்திருத்தல் வேண்டும்' என்பது போப்பையர் தமிழ் இலக்கணம் கற்றாரது உரைநடையே. அதனைத் தொல்காப்பிய வுரை ஆராய்ச்சியாளர் கையாளுதல் பழிக்கப் படுவதேயாம்.

'ஓராற்றால் என்கண் இமைபொருந்த வந்திலையே
கூரார்வேல் மாறன்என் கைப்பற்ற—ஓரா
நனவென் றெழுந்திருந்தேன் நல்வினையொன் றில்லேன்
கனவும் இழந்தொழிந்த வாறு.' (முத்தொள்ளாயிரம்)

'யான் பிறனளியன் வாழ்வான் ஆசைப்பட்டிருக்கின்றேன்.' எனவும், எழுந்திருந்தான், உண்ணவிருந்தான் (முதற்சூத்திர விருத்தி) எனவும் வழக்கு உளவே. 'இருந்திருந்தான், இருந்திருத்தல் என்று சான்றோர் நூலுரையில் எங்கேனும் வழக்கு உண்டோ?

மறுப்பு 15.

(முகவுரை பக்கம்-3.) 'எழுத்தெனப்படுப........முப்பஃதென்ப' என்னும் சூத்திரத்திலே 'என்ப' எனவும் 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' என்னும் சூத்திரத்திலே

'மொழிப' எனவும், அவ்வாறே வேறு பல சூத்திரங்களிலே 'அறிந்திசினோரே' எனவும் 'உணர்ந்திசினோரே' எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் வழங்கியதனால், 'அவரால் எடுத்தாளப்பட்ட ஆசிரியர்கள் அகத்தியனாரும் அவர் மாணாக்கரும் என்பர்' என்று கூறினார். அதுவுமன்றி, வேற்றுமை, உயிர், மெய், உயர்திணை அஃறிணை புணர்ச்சி முதலிய குறியீடுகளெல்லாம் தொல்லாசிரியர் இட்டனவென்றும் கூறினார். இக்காலத்திலே ஆங்கிலமொழிப் பயிற்சி மிகுதியினாலே அம்மொழியிற் பற்று மிக்குற்று, தமிழ்மொழியிலே உள்ள அறம் பொருள் இன்ப நூல்களையும் உயர்ந்த ஞான நூல்களையும் நல்லாசிரியரை அடுத்துக் கேட்டும் சிந்தித்தும் தெளிந்தும் கொள்ளாது, கதைகளிலே ஒன்றோடொன்று முரணுவனவாகக் காணப்படும் வடமொழிப் புராணங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டனவற்றிலே, அவ்வகைப் பட்ட முரண் இருப்பதைக் கொண்டு, கடவுளால் இவ்வாறு செய்யப்பட்டன என்று சொல்லப்படும் செயற்கரிய செயல்களும் முனிவராலே செய்யப்பட்டனவாகச் சொல்லப்படும் செயற்கரிய செயல்களும் பொய்யென இகழ்ந்து ஒரு நிலையின்றிச் சுழல்வார் பலர். அவருடைய தமிழ்நூல் ஆராய்ச்சி ஆடு தழை மேய்ந்தாற் போன்றதே. அவருடைய தெய்வ பத்தியும் ஆகாயத் தாமரையே.

உலகத்திலுள்ளார் எல்லாரும் அறிவாளிகள் அல்லர். எல்லாரும் எடுக்கும்போதே அறிவு நூல் ஓதுதற்கு தகுதியுடையாரும் அல்லர். ஆதலின் வடமொழியாளர், புராணங்களிலே தாம் உணர்த்துவான் எடுத்துக்கொண்ட சில நற்பொருள்களைப் பலபொய்யும் புனைந்துரையும் மிடைந்த கதைகளோடு கூட்டி விரித்துரைத்தார். பண்டைக் காலத்திலே பொய்யும் புனைந்துரையும் தமிழ்மொழியிலே இல்லை; தமிழ் நாட்டினும் இல்லை. அவை இல்லையென்பதற்குப் 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்—ஐயர் யாத்தனர் கரண மென்ப' என்னும் தொல்காப்பியப் பொருளதிகாரத்துச் சூத்திரமே சான்று. பிற்காலத்திலே வடமொழிப் புராணக் கலப்பினால் தமிழ் மொழியினும்

பொய்யும் புனைந்துரையும் செறிந்துறவே, பொய்யொடு மெய் யிடை வேற்றுமை தெரியவியலாது, தமிழுலகம் தடுமாறுவ தாயிற்று. கடைச் சங்கத்து நல்லிசைப் புலவர் இயற்றிய நூல்களும் பாட்டுக்களும் உண்மைப் பொருள்களை உள்ளவாறே உரைத்தவாறு கண்டு கொள்ளலாம். ஆகவே, தமிழ்நூல் களிலே பிற்காலத்தே புகுந்த பொய்யுரையும் புனைந்துரையும் ஒதுக்கி மெய்யுரையை ஏற்றுக்கோடல் பெரும்பாலார்க்கு இயலாதாயினும் 'நீரொழியப் பாலுண் குருகை' ஒத்தாருக்கு அது இயலாததன்றாம். பொய்யொடும் புனைந்துரையோடும் கூட்டிச் சொல்லப்பட்டதனால் உண்மையையும் ஒதுக்குதல் அறிவன்று. ஈயினது எச்சிற்பட்டமையால் தேனை விலக்குவார் உளரோ? சிறையை மீறிச் சென்றதனால் நீரை வெறுப்பார் உளரோ?

தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் சிலபொருள்களைப் புனைந்துரை வகையாற் கூறினர். சிலபொருள்களை உபசார மாகக் கூறினர். சிலபொருள்களைத் தந்துணிபு பற்றிக்கூறுமல் பிறர் மதம்பற்றியே கூறினர். சிலபொருள்களைப் புலவர் மரபு பற்றிக் கூறினர். இதனை வடநூலார் கவி சம்பிரதாயம் என்பர். சிலபொருள்களை பிறர் மதத்தை மறுத்தல் என்னும் மதம்பற்றிக் கூறினர். பிறர் மதம்பற்றி வந்த வேறு சில பொருள்களை வெளிப்படையாக மறுத்தார்.

'தாம்வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு' (குறள்) இது புனைந்துரை

பொய்யுரையன்று. இதனால், புனைந்துரையோடு பொய்யுரையி னிடை வேற்றுமை தெரிந்து கொள்க. இது பேரின்பத்திற் குரிய நீ இச்சிற்றின்பத்திற்கு இப்படி வருந்தல் தகாதென்ற பாங்கனுக்குத் தலைவன் கூறியது. தாம் எம்மை விழைவார்* அவருடைய மெல்லிய தோளில் துயிலுதலைக் காட்டினும் இன்பந் தரத்தக்கதோ தாமரைக் கண்ணனது உலகு எ-று.

---

* தம்மால் விழையப்பட்டார் என்பது பரிமேலழகர் உரை.

22

இக்குறளுக்கு உரைகூறிய பரிமேலழகர், அத்துயிலைக் காட்டினும் சிறந்த இன்பத்தைத் தரத்தக்கது தாமரைக் கண்ணான் உலகு என்னும் பொருள்பட உரைத்தார். அது பொருந்தாதென விடுக்க. இங்கே தாமரைக் கண்ணான் உலகைக் காட்டினும் இன்பந் தரத்தக்கது மென்றோளின்கண் துயிலுதல் என்று புனைந்துரைவகையால் தலைவன் கூறினான் என்றே கொள்க. எனவே உண்மையால் நோக்கின், துயிலினும் தாமரைக் கண்ணான் உலகு சிறந்தது என்பதே முடிவு. அது கிடக்க, தாமரைக் கண்ணான் என்பதிலும் அவன் உலகு என்பதிலும் புனைந்துரையோ என்ற ஐயம் வேண்டா, உண்மை யென்றே கொள்க,

'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. (குறள்) இது உபசாரம்.

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத் தாறோம்பல் தலை.'

'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றினின்ற துணை.' இவற்றுள் தென்புலத்தார் என்றதும் மூவர்க்கும் என்றதும் பிறர்மதம் பற்றிக் கூறியன.

'கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்பு கொண்டற்று.' இதனுள் திங்களைப் பாம்பு கொண்டதென்றது புலவர் மரபு.

'ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்ததில்.

'ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.' இவை பிறர்மதத்தைக் குறிப்பான் மறுத்தல்.

'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.'

'வறியார்க் கொன்றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.' இவை பிறர்கொள்கை
யை வெளிப்படையாக மறுத்தல்.

இங்ஙனம் பிறர்மதத்தை மறுத்துத் தம்மதம் நிறுவிய பொய்யாமொழியாரும் தெய்வம் பற்றியும் நீத்தாரைப்பற்றியும் மிகப்போற்றி எடுத்தோதினர். 'பொறிவாயில் ஐந்தவித்தான்.' அடியளந்தான், இந்திரன் (வேந்தன்), கூற்று, தேவர் (அமரர்), புத்தேளிர் வாழும் உலகு, அளறு (நரகம்) (ஆரிருள்) திரு, தவ்வை, அணங்கு, தாக்கணங்கு என்று இவரைப் போற்றி யுரைத்தார்.

'ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.'

'எந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.' என்பவைகளால் கவுதமனர்
முதலிய நீத்தாருடைமை பெருமையைப் போற்றி உரைத்தார்.

'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.'

'செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.' எனவும் ஓதியவாற்றல் நீத்தார் ஆவார் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஒழிய வாழும் தகைமையினர் என்பதையும் அவர் செயற்கரிய பெருஞ்செயல்களைச் செய்யும் ஆற்றல் படைத்தார் என்பதையும் உணர்த்தினர். நமது செந்தமிழ் சிவணிய நிலத்திலே பிறந்தவராகிய **மார்க்கண்டேயனர்** என்னும் முனிவர், முக்கட்செல்வன் திருவருளால் கூற்றுவனை மாற்றி, இறவாத பெருவாழ்வு பெற்ற உண்மையைத் **திருக்கடவூர்** என்னும் திருவூர் சான்று பகர்கின்றதே. அதைக் கருதியே போலும், 'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்—ஆற்றல் தலைப்பட் டவர்க்கு' என்று பொய்யாமொழியார் கூறியது.

ஆகவே **அகத்தியனர்** என்னும் நம் அருந்தவ முனிவர், முக்கட்பெருமான் அருள்பெற்றுடையவர். கடலை உண்டு

உமிழ்ந்தவர், விந்தத்தை அழுத்தினவர், வாதாவி இல்வலன் இவர்களை இல்வலராக்கினவர். தழற்புரை சுடர்க்கடவுளால் தரப்பட்டு என்றுமுள தென்றமிழுக்கு இலக்கண நூல் இயற்றி வரம்பு கண்டவர். பாண்டியன் செய்த அருந்தவப்பயனால் பொதியிலில் கோயில்கொண்டு அமர்ந்தருளியவர். இன்னும் பல செயற்கருஞ் செயல்கள் செய்த பேராற்றல் படைத்தவர். இவர்க்குக் கூற்றம் குதித்தலும் மிக எளிதேயென்று காணு தார் திருக்குறட் பகைவரே. இம்முனிவர்; பாண்டி நாட்டிலே நிலையுற்ற மூன்று தமிழ்ச்சங்கங்களுள்ளே, முதற் சங்கத்தினும் இடைச் சங்கத்தினும் வீற்றிருந்து தமிழை வளர்த்தாரென்றும் கடைச்சங்க முதலிலும் நக்கீரனுருக்கு இலக்கணம் செவியறி வுறுத்தருளினரென்றும், இறையனார் அகப்பொருளின் முகவுரை சிலப்பதிகாரத்தின் அடியார்க்கு நல்லாருரை திருவிளையாடற் புராணம் முதலிய நூல்கள் உணர்த்துகின்றன. இம்மூன்று நூல்களிலும் இறையனார் அகப்பொருளுரையே முந்தியது. இப்பொழுதிற்கு ஓராயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற் பட்டது என்னத் தடையில்லை. அந்த உரை நக்கீரனுரால் செய்யப்பட்டதென்பர். இறையனார் அகப்பொருள் என்னும் நூலுக்கு நக்கீரனார் உரையியற்றினர் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும் இப்போது அச்சிடப்பட்டிருக்கும் உரை முழுதும் அவரது உரையே என்று சொல்வதற்குச் சிறிது தடையுளது. கடைச் சங்கப்புலவர் நாவிற் புகாத பிற்காலத்து அரசர், பாட்டுடைத் தலைவராக அமைக்கப்பட்ட செய்யுட்கள், இந்நூலின் உரை மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. 'இருவருமுள்வழி அவன் வரவுணர்தல்' என்னும் தொடரில் வரவு என்பது வழுவமைதியென்று எழுதினர் அதற்குமேற் கோளாகத் 'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது' என்ற தனைச் சான்றோரும் அமைத்தார்' என்று குறித்தார். தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது' என்று அமைத்த சான்றோரும் நக்கீரரே (அகம். 36) ஆதலால் அவையும் அவைபோன்றன சிலவும் பிற்காலத்திலே நக்கீரர் உரையிடையே செருகப் பட்டனவென்பதே துணிவு. பிற்காலத்திலே நக்கீரர் உரையை அங்ஙனம் இடைச்செருகலோடு விரித்துரைத்தவர் இளம்பூரண

வடிகள் எனவும், அதற்குப் பாயிரம் கூறினாரும் அவரே யெனவும் சில தமிழறிஞர் கூறுவர். பாயிரத்துள்ளும் சில இடைச்செருகல் உள்ளனவென்பதன்றி, பாயிரம் கூறினாரும் நக்கீரரே யென்பது சான்றோர் கருத்து. பாயிரம் கூறினாரும் நக்கீரரே யாவர் என்பதற்குச் சான்று என்னையோவெனின் அவரது உரை நடையே சான்றென்பது, அவரது உரை யானது, அடிதொட்டு முடிவுகாறும், புலவர் என்னும் குழவி களுக்குத் தமிழ்த்தாயின் திருவாயிலிருந்து புறப்பட்ட குழலை யும் யாழையும் பழித்த தாலாட்டிசைபோலும் எதுகைத் தொடையும் மோனைத் தொடையும் இசையுற அமைந்த நடை யினையுடையது. அந்நடை, வேறெந்தப் புலவர்க்கும் அமையப் பெற்றிலது. அந்த நடையைக்கொண்டு நக்கீரர் உரையை வேறு ளார் உரையினின்றும் பிரித்தெடுத்துக் கொள்ளலாகும். பாயிரத் துள்ளும், 'கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயின் மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், தகைமாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட பாவைபோலவும்' பாயிரம் நூற்கு இன்றி யமையாதது என்று உரை காணப்படுகிறது. இன்னும் 'இந் நூல் செய்தார் யாரோவெனின், மால்வரை புரையுமாடக்கூடல் ஆலவாயிற் பால்புரை பசுங்கதிர்க், குழவித் திங்களைக் குறுங் கண்ணியாகவுடைய அழலவிர்சோதி அருமறைக் கடவுள் என்பது' என்றும் உரைநடை வந்தது. இந்நடை அவ்வரு மறைக்கடவுள் அருள்பெற்ற நக்கீர தேவருக்கன்றி வேறு எவர்க்கு அமையும்? ஆதலால் பாயிரம் கூறினாரும் நக்கீரரே யெனவும், நூலுரையுள்ளே பிற்காலத்தோரால் இடைச் செருகல் நேர்ந்தாற் போலப் பாயிரத்தினும் இடைச்செருகல் சேர்ந்த தெனவும் துணிந்துகொள்க.

சொல்லதிகாரக் குறிப்புரையாளர், 'என்ப' 'மொழிப' என்னும் வழக்கினால் தொல்காப்பியனார், அகத்தியனாரையும் அவர் மாணாக்கரையும் சுட்டினாரென்று கூறியதுபற்றித், தொல் காப்பியத்துக்கு முதனூல் இன்னதென்று, முதலில் உரைத்த இறையனாரகப் பொருளுரையின் வரலாற்றை இங்குச் சிறிது விரித்துக் கூறல் வேண்டுவதாயிற்று.

இனி, 'இறையனர் அகப்பொருள்' என்பது இறையனரது அகப்பொருள் எனவிரியும். ஆருவது செய்யுட் கிழமைப் பொருளில் வந்தது; பரணரது பாட்டியல் என்றாற்போல. எனவே இறையனரால் இயற்றப்பட்ட அகப்பொருணூல் என்பதுபொருள். இறையனர் என்றது ஆலவாயிற் சிவபெருமானை, இறைவனும், நூலென ஒன்று இயற்றுதல் உண்டோ? யாரோ ஒருபுலவர், இறையனர் என்னும் பெயர் கொண்டவர், கடைச்சங்கப் புலவருள் ஒருவர், அவர் செய்து வைத்த அகப்பொருள் என்னும் நூலைப் பிற்காலத்திலே சிலர் சிவபெருமானல் செய்யப்பட்டதென்று வெளியிட்டாரென்று, இக்காலத்தே ஆங்கிலப்பயிற்சி மிகுதியுள்ள தமிழ்ப்புலவர் சிலர் கூறத் தலைப்பட்டார். அதுவேயுமன்றி, அவ்வகப் பொருணூலுக்கு நக்கீரனர் உரைத்த உரையை உருத்திரசன்மனர் கேட்டார் என்ற பாயிர வரலாற்றையும், அகத்தியனர் என்பார் முதற் சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் பல்லரயிரம் ஆண்டுகளாகவும் இருந்து தமிழை வளர்த்தார் என்பதையும் மக்களியல்புக்கு மாருனவையென்று கூறினர். இறைவன் முனிவரோடு பேசினன் என்றும் முனிவர் இறைவனேடு பேசினரென்றும், முனிவர் நெடுங்காலம் வாழ்ந்திருந்தாரென்றும் அவரும் இறைவனும் செயற்கரிய செயல்களைச் செய்தனரென்றும் எல்லா மத நூல்களும் முழங்குகின்றன. கிறிஸ்துமத நூலாரும் இறைவன் முதல் ஆண்மகனேடு பேசினரென்றும், நோவா முதலிய பெரியோர் நெடிய வாழ்வுடையராயிருந்தார் என்றும், கிறித்துநாதர் கன்னிவயிற்றில் பிறந்தாரென்றும், அவர் பல் செயற்கரிய செயல்களைப் புரிந்தாரென்றும் கூறும் அம்மத நூற்கொள்கைகளை மறுக்கமாட்டார்.

சைவர் எனப்படுவார், சம்பந்தர் அப்பர் சுந்தரர் மணிவாசகர் இவர்கள் இறைவனருளால் செயற்கரிய செயல்களைச் செய்தாரென்று முழங்கும் தம்மதநூற் கொள்கைகளை ஒருஞான்றும் மறுக்கமாட்டார்.

வைணவர் என்று சொல்லப்படுவார் 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலும், ஆழ்வார்களும் செய்த

அருஞ்செயல்களைக் கூறும் தம்மத நூற் கொள்கைகளை என்றும் மறுக்கமாட்டார். வடமொழியாளரும் வேதம் இறைவன் வாக்கென்பர். வேதாந்திகள் என்று சொல்வாரும் இறைவன் நால்வர்க்கு ஞான நூற்பொருளைச் செவியறிவுறுத்தார் என்று கூறுவர். ஆகவே, இறையனார் அகப்பொருணூல் பற்றியும் உரைபற்றியும் தெய்வத் தன்மையால் நிகழ்ந்த செய்திகளை மறுப்பார் உளரேல், அவர் மேற்கண்ட மதங்களுள் எதனிலும் சார்பிலராய், திரிசங்கு என்பானைப்போல ஒன்றினும் நிலையில ராய் மயங்குவர் ஆதலின், அவர் உரையை யாம் ஒருபொருட் படுத்தவேண்டா.

இனி இறையனார் அகப்பொருள் என்னும் இலக்கண நூல் செய்தார் இறையனார் பெயர்கொண்ட சிவபெருமானே என்பது, எற்றாற் பெறுதும் எனின், அதன் பாயிரவுரை யிலே, 'ஆக்கியோன் பெயர்........மால்வரை புரையும் மாடக் கூடல் ஆலவாயிற் பால்புரை பசுங்கதிர்க் குழவித்திங்களைக் குறுங்கண்ணியாகவுடைய அழலவிர்சோதி அருமறைக்கடவுள்' என்றும், 'வழியென்பது........இது 'வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவனாற்' செய்யப்பட்டமையால் வழிநூலென்று சொல்லப்படாது முதனூலெனப் படுமென்றும், 'கேட்போர் ....இது முனைவன் தன்னாற் செய்யப்பட்ட நூல் ஆகலின் கேட்டாரை யின்றெனவும், 'காரணம்........ஆலவாயிற் பெரு மானடிகளால் வெளிப்படுக்கப் பட்டதென்றும், அவ்வகப் பொருணூல் வெளிப்பட்டவுடனே நக்கீரர் எழுதியரங்கேற்றிய உரைப் பகுதிகளாற் பெறுதும் என்க. இனி, இறையனார் அகப்பொருள் உரையிலே நக்கீரனார், முதற்சங்கத்தார்க்கு இலக்கண நூல் அகத்தியம் ஒன்றே என்றும் இடைச்சங்கத் தார்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமுமென இவையென்றும், கடைச் சங்கத்தார்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமுமே யென்றும் கூறினார். இதனால் அகத்தியத்திற்கு முற்பட்ட நூல் ஒன்றும் இல்லையென்பதும், மாபுராணம் இசைநுணுக்கம் பூதபுராணம் என்னும் இவை தொல்காப்பியத்துக்குப் பின்னே

தோன்றி இடைச் சங்ககாலத்தே வழக்கிறந்தனவென்பதும் அகத்தியம் மூன்று சங்கங்களிலும் வழங்கப்பட்டுக் கடைச் சங்கத்தோடு மறைந்ததென்பதும் பெற்றாம்.

இற்றைக்கு ஆயிரவாண்டுகட்கு முன் தோன்றினவராகிய பேராசிரியர் என்னும் பெரியார் 'வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்' என்னும் தொல்காப்பிய மரபியற் சூத்திரவுரையிலே, இவ்வகைப் பொருணூலைச் செய்தவர் ஆலவாயிற் பெருமானடிகளே யெனவும் அதற்கு உரைகண்டார் கடைச்சங்கப் புலவராகிய மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரரே யெனவும் கூறினார். அவர் மேலும் அச்சூத்திரவுரையிலே, 'இடைச் சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியமென நக்கீரரே கூறினாரென்றமையால், இறையனார் அகப்பொருளுரைப் பாயிரமும், ஒரு சில பகுதியொழிய நக்கீரராலே உரைக்கப் பட்டது என்பதில் மயங்குதற்கு இடன் இன்று. அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரவுரையில், இளம் பூரணவடிகள் முகவுரை யென்று குறித்தது, தொல்காப்பியவுரைக்கு அவர் எழுதிய முகவுரைபோலும்.

இனிப் பிற்காலத்திலே, இறையனார் அகப்பொருளுரையின் வரலாறுபற்றிப் பேராசிரியர் உரைத்ததனைப் போற்றியே சிவஞான முனிவரும் பாயிர விருத்தியுள் உரைத்தார். இத்துணையும் கூறியவாற்றால் யாம் எடுத்துக்கொண்ட பொருட்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகிய இறையனார் அகப்பொருளுரை ஆராய்ச்சி ஒருவகையால் முடிந்தது.

இனி, அவ்வுரையைத் துணைப்பற்றிக்கொண்டு, தொல்காப்பியத்துக்கு முதனூல் எது? 'என்ப' 'மொழிப' என்னும் வழக்கினால் தொல்காப்பியனாரால் சுட்டப்பட்ட ஆன்றோர் யார்? அவர் குறிப்புரையாளரால் சுட்டப்பட்ட அகத்தியனாரும் அவர் தம் மாணாக்கரும் தாமோ என்று ஆராய்வாம்.

அகத்தியனுர் தொல்காப்பியனுர்க்கு ஆசிரியர் என்பது குறிப்புரையாளர் உளப்பட எல்லார்க்கும் ஒப்ப முடிந்த முடிபே. ஆயினும் தொல்காப்பியத்துக்கு முதனூல் அகத்தியமும் அகத்தியனுர் மாணுக்கர் செய்த நூல்களும் என்பது குறிப்புரையாளர் குறிப்பு. மாணுக்கர் செய்த நூலும் தொல்காப்பியத்துக்கு முதனூலாயிற்று என்பதிலே தான் தடையெழுகின்றது. ஆகவே அகத்தியனுர் மாணுக்கர் என்பார் யார்? அவர் தொல்காப்பியத்துக்கு முந்திச் செய்த நூல் யாவை? என்று தெரிதல்வேண்டும். அகத்தியனுர் மாணுக்கர் செய்த நூல் என்றதனுல் குறிப்புரையாளர், தொல்காப்பியனுரொழிந்த மாணுக்கர் என்று யாம் கருதிக்கொள்ள வைத்தார் போலும். ஆயினும் அம்மாணுக்கர் இன்னுரென்றும் அவரால் செய்யப்பட்ட நூல் இன்னவென்றும் குறிப்புரையாளர் கூறினுரிலர். அதுகிடக்க,

'வீங்குகடல் உடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென
வானேர் ஏத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனுப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்.'

இது அகத்தியர் தம் மாணுக்கர் தொல்காப்பியரை உள்ளிட்ட பன்னிருவராலும் செய்யப்பட்ட பன்னிருபடலம் என்னும் புறப்பொருள் இலக்கணத்திற்கு அக்காலத்தே அமைந்த பாயிரத்தின் பகுதி.

'கூறிய குன்றினும் முதனூல் கூட்டித்
தோமின் றுணர்ந்த தொல்காப் பியன்றன்
ஆணையில் தமிழ்அறிந் தோர்க்குக் கடனே.'

இது பல்காப்பியம் என்னும் இடைச்சங்கத்து நூலின் புறனடைச் சூத்திரம்.

'மன்னிய சிறப்பின் வானேர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்

தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னரும் சீர்த்தித் தொல்காப் பியன் முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த.' இது பன்னிரு படலத்தின் வழியாக ஐயனாரிதனார் என்பவரால் செய்யப்பட்ட புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலுக்கு அமைந்த பாயிரம்.

இவற்றானெல்லாம் குணமென்னும் குன்றேறி நின்றார் ஆகிய அகத்தியனாரது கடவுட்டன்மையும் பெருமையும் விளங்குவதோடு, அவரால் செய்யப்பட்ட அகத்தியம் என்னும் நூலே முற்காலத்து முதனூல் என்பதும், அதுவே தொல் காப்பியனாரால் இயற்றப்பட்ட தொல்காப்பியம் என்னும் நூலுக்கும் மற்றை மாணக்கரும் பிறரும் செய்த நூலுக்கும் முதனூலாம் என்பதும், அகத்தியனார் மாணக்கர் பன்னிருவருள்ளும் தொல்காப்பியனாரே முதன்மையானவர் என்பதும் தெற்றென விளங்கும். அகத்தியனார் மாணக்கருள் ஏனையோர் இயற்றமிழ் இலக்கண நூல் செய்துள்ளாரெனின், அவையெல்லாம் தொல்காப்பியனார் செய்த இயற்றமிழ் இலக்கண நூலுக்குப் பிற்பட்டனவே யாம். ஆகவே மற்றை மாணக்கர் செய்த நூலையும் ஆராய்ந்து தொல்காப்பியனார் நூல் செய்தார் என்னும் குறிப்புரையாளர் கருத்துச் சிறிதும் பொருந்தாதென மறுக்க.

இனித் தொல்காப்பியத்துக்கே சிறப்புப் பாயிரம் என்ப தொன்றுண்டே. அது தொல்காப்பியனாரோடு ஒருங்கிருந்து கற்ற பனம்பாரனார் என்பவரால் செய்யப்பட்டது.

'வடவேங்கடந், தென் குமரி,
ஆயிடைத், தமிழ்கூறு நல்லுலகத்து
....
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.' என்பது.

இது 'செந்தமிழ் சிவணிய நிலத்தொடு முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தோன்—தொல்காப்பிய

னெனத் தன்பெயர் தோற்றிப் பல்புகழ் நிறுத்த படிமை யோனே' என்று கூறியது. இதனுள் முந்துநூல் என்று சொல்லப்பட்டது அகத்தியம் ஒன்றே. அகத்தியம் என்னும் நூலும் வேறோர் முதனூலையுடைத்து என்று யாண்டும் கூறப் படவில்லை. மாபுராணம் முதலிய நூலெல்லாம் தொல்காப்பி யத்துக்குப்பின் தோன்றிய நூலேயாம். 'இடைச் சங்கத் தார்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமுமென இவை' யென்று நக் கீரனார் பாயிரவுரையுள் கூறிய நூல் வரிசையுள் மாபுராணம் முதலியன தொல்காப்பியத்தை அடுத்துப் பின்னர்த் தோன்றி யன என்பது தெள்ளிது.

இதுவே சிவஞான முனிவர்க்கும் கருத்தாதல், பாயிர விருத்தியால் துணியப்படும். சிவஞான முனிவர் பாயிரவிருத்தி முழுதும், பேராசிரியரது உரையையும் முன்னோர் கருத்தையும் அடிப்படை கொண்டுள்ளது. அதனை அசைத்தற்கு எவராலும் ஆகாதென்பது தேற்றம்.

இனிச் சேனாவரையரும் 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரத்தில் 'என்மனார்' என்பதற்கு 'ஆசிரியர்' என ஒருசொல் 'சொல்லெச்சம்' என்பதனால் வருவித்து முடித்தார். தொல்காப்பியனார்க்கு ஆசிரியர் அகத்தி யனாரன்றி வேறு யார்? ஆகவே அவர்க்கும், தொல்காப்பி யனார் 'என்ப' 'மொழிப' என்பதனால் குறித்த ஆசிரியர் அகத்தியனார் என்பதே கருத்துப்போலும்.

இனி, அகத்தியனாரைச் சபித்த பெருந்தகைமையினை உடையவர் தொல்காப்பியர் என்று, அவரைப் புகழ்வது போலப் பழித்த பழியினீங்காத நச்சினார்க்கினியரும்,

'இன்னென வரூஉம் வேற்றுமை உருபிற்கு
இன்னென் சாரியை இன்மை வேண்டும்.'
'வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்'

என்னும் சூத்திரவுரைகளிலே, வேண்டும் ஆசிரியன் என்று கூறி முடித்தார். அன்றியும்,

'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை யென்ப' என்னும் பொருளதிகாரத்து அகத்திணையியற் சூத்திரவுரையுள் 'என்ப என்றது அகத்தியனாரை' எனவும், 'கைக்கிளை பெருந் திணை என்னும் இக்குறியீடுகளும் அகத்தியனார் இட்டவென்று உணர்க' என்றும் கூறினர். ஆகவே அவர்க்கும் தொல்காப்பி யத்துக்கு முதனூல் அகத்தியமொன்றே என்பதே கருத்துப் போலும்.

இங்ஙனமாகவும், குறிப்புரையாளர் தொல்காப்பியத்துக்கு முதனூல் அகத்தியமும் வேறு சில நூல்களுமாமென்றும், வேற்றுமை முதலிய குறியீடுகள் எல்லாம் அகத்தியனாரும் பிறரும் இட்டனவென்றும் கூறியது, மேற்கண்ட ஆசிரியர் குறிப்புக்களை ஆராய்ந்துணராமல் இக்காலத்துப் புலவர் சிலர் எழுதிய குறிப்புரையைப் பற்றியது போலும்.

இதனாலே, மாபுராணம் முதலியனவும் தொல்காப்பியத் துக்கு முதனூலாம் என்ற நச்சினார்க்கினியர் உரையும் அரசஞ் சண்முகனார் பாயிர விருத்தியிற் கூற்றும் மறுக்கப்பட்டவாறு அறிக.

மறுப்பு 16.

(முகவுரை பக்கம்-7) 'ஒவ்வொரு சூத்திரத்திலும் ஒன் றனையே உத்தேசித்து ஒன்றே விதிக்கப்பட்டது.' என்றார்.

ஈண்டு 'உத்தேசித்து' என்பது 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அது 'முதனிலை மூன்றும் வினை முதல் முடிபின' என்னும் சூத்திரவிதியால் யாண்டும் தன் வினை முதல்வினை கொண்டே முடிதல் வேண்டும். அவ்வாறன்றி 'விதிக்கப்பட்டது' என்னும் பிறவினை முதல் வினைகொண்டு முடிந்தது வழுவாதல் அறிக.

'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் தன்வினை முதல் வினையால் முடிவனவும் உள, பிறவினை முதல்வினையால்

முடிவனவும் உளவென்று சேனவரையரும் நச்சினர்க்கினியரும் கூறிய மயக்கவுரை சிவஞான முனிவரால் பாயிர விருத்தியிலும் இலக்கண விளக்கச் சூருவளியிலும் மறுக்கப்பட்டது. திருக்குறள் நுண் பொருண்மாலை ஆசிரியராலும் அது மறுக்கப்பட்டது. இளம்பூரணர் பேராசிரியர், பரிமேலழகர் தெய்வச்சிலையார் முதலிய உரையாசிரியர்களெல்லாம் 'முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின' என்னும் சூத்திரத்தொடு முரணுதலை அஞ்சி, செய்து என்னும் வாய்பாட்டால் நின்று பிறவினைகொண்டு முடிந்தனவற்றையெல்லாம் செயவெனச் சத்திரிபென்றே கொண்டு இலக்கணம் விளங்க எழுதிச்செல்வர். குறிப்புரையாளர் அச்சூத்திரம் பற்றியும் உரையாசிரியர்கள் கருத்து மாறுபாட்டைப் பற்றியும் மேலும் ஒன்றும் கூருமையால், அவர் வினையெச்ச விலக்கணம் அறியார் போலும்.

மறுப்பு 17.

(முகவுரை பக்கம்-3.) இவர் (தொல்காப்பியர்) தமிழ்மொழி வடமொழி இவ்விரண்டையும் நன்காராய்ந்து, முன்னர் இருந்த இலக்கணங்களினும் சிறந்ததோர் இலக்கணம் எழுதத் தொடங்கினர் என்பது திண்ணம் என்றார்.

'முன்னர் இருந்த இலக்கணங்கள்' என்று பன்மைப்பாலாற் கூறியது தவறு. தொல்காப்பியத்துக்கு முன் நிலவியது அகத்தியம் ஒன்றே என்பது முன்னமே நிறுவப்பட்டது. அது நிற்க, மேற்கண்ட குறிப்புரையினல், தொல்காப்பியம் என்னும் நூல் அகத்தியத்தினும் சிறந்ததென்பதும், தொல்காப்பியர்க்கு அகத்தியரினும் மிக்க வடநூற் பயிற்சியுண்டென்பதும் குறிப்புரையாளர் கருத்துப்போலும். அற்றேல், இவர் அருந்தவமுனிவர் அகத்தியனரைப் பிழைத்த பழியை எய்தினராவர். அன்றியும் இப்பொருள்பற்றிப் பண்டைப் புலவருடைய கருத்தும் உரையாசிரியருடைய கருத்தும் இன்னதென்பதை உணராதவருமாவர்.

தொல்காப்பியத்துக்குச் சிறப்புப்பாயிரம் கூறினர், தொல்காப்பியரோடு ஒருசாலை மாணக்கராகிய பனம்பாரனர் என்பார்.

அவர், இவர் கருதியவாறு அகத்தியத்தினும் சிறப்புறத் தொல்காப்பியம் செய்யப்பட்டதென்று அச்சிறப்புப் பாயிரத்தில் கூறினரா? அவர் தொல்காப்பியனருக்கு ஏற்ருத உயர்வை இக்குறிப்புரையாளர் ஏற்றுவது எற்றுக்கு? அவர் அச்சிறப்புப் பாயிரத்தில் கூறியது 'முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணி எழுத்து முறைகாட்டிப் புலந்தொகுத்தோனே' என்று தான் கூறினர்.

அச்சிறப்புப் பாயிரத்தின் உரையிலே **நச்சினர்க்கினியரும்** அகத்தியத்திலே இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் இலக்கணங்களும் விரவிக் கிடந்ததனல் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினர்க்கு அறியலாகாமையின், இத்துணை வரையறுத்து இயற்றமிழை வேறு பிரித்து அதிகார முறையான் முறைப்படச் செய்தலே எண்ணி இந்நூல் செய்தார் என்று கூறினர்.

சிவஞானமுனிவரும் இந்நச்சினர்கினியர் கருத்தைத் தழுவியே பாயிரவிருத்தியுள் கூறினர், நச்சினர்கினியர் மாபுராணம் முதலியனவும் முந்து நூலாம் என்றதனை மறுத்தாராயினும்.

இனி, அகத்தியம் என்னும் நூல் வழக்கிறந் தொழிந்தமையால், தொல்காப்பியத்தின் சிறப்புத் தானே விளங்குமெனின், அற்றேல் இக்காலத்துத் தொல்காப்பிய நூற் பயிற்சியினும் நன்னூற் பயிற்சி சிறந்ததாகலின், அத்தொல்காப்பியத்தினும் நன்னூல் இயன்முறையால் சிறந்த தாகாதோ வென்று மறுக்க.

இனி ஆசிரியர் அகத்தியனரினும் தொல்காப்பியர் வடநூற்பயிற்சி மிக்குடையார் என்ருர், 'ஏழியன் முறையது எதிர்முகவேற்றுமை, வேறென விளம்பான் பெயரது விகாரமென்று ஓதிய புலவனும் உளன் ஒருவகையான், இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்' என்னும் **அகத்தியத்திலுள்ள** சூத்திரம் அவ்வகத்தியனர் ஐந்திரவியாகரணத்தையும் நன்ருக ஆராயந்தவர் என்பதை உணர்த்துதலால், தொல்காப்பியனர்க்கு

ஐந்திரவியாகரணத்தைச் செவியறிவுறுத்திய ஆசிரியரும் அகத்தியனாரேயென்பது அறியார்போலும். சிவஞான முனிவரும் இவ்வாறே கூறினர் என்பது பாயிரவிருத்தியிற் காண்க.

மறுப்பு 18.

(முகவுரை பக்கம்-3) 'அவ்வாறு (இலக்கணம் எழுதத்) தொடங்குமுன் அம்மொழிகள் இரண்டற்குமுள்ள வேற்றுமை ஒற்றுமை இரண்டனையும் அறிந்து வடமொழி முறைகளைத் தமிழ்மொழியின் அழகு குன்றுவாறு எங்கு ஆளவேண்டுமோ அங்கு ஆண்டும், மொழி பெயர்த்தும் அம்முறைகளினின்றும் மாறுபடும் இடங்களை உரியவிடங்களில் காட்டியும் போந்தனர் ஆசிரியர் என்பது பார்க்கப்பார்க்க மிக்க வியப்புண்டாக்குகின்றது.' என்றார். அன்றியும் (முகவுரை பக்கம்-2ல்) 'ஆசிரியர் வடமொழியில் ப்ராதி சாக்ய நூல்களையும் யாஸ்கரது நிருத்தத்தையும் மற்றுமுள்ள இலக்கண நூல்களையும் நன்கு அறிந்தவரென்பது, முறையே பிறப்பியல் மொழி மரபு இவற்றிலுள்ள சூத்திரங்களாலும், உரியியற் சூத்திரங்களாலும், வேற்றுமைப்பொருளை உணர்த்தும் சூத்திரங்களாலும், நன்கு அறியப்படும் என்றும் கூறினர். அதற்கு மேற்கோளாகக் ககாரஙகார முதனா அண்ணம் 'சகாரஞகாரம் இடைநா அண்ணம்' என்னும் தொல்காப்பிய வெழுத்தியற் சூத்திரங்களை எடுத்துக்கொண்டு அப்பொருள் படவே கூறிய வடநூற் சூத்திரங்களைக் காட்டினர். இதனால், வடமொழியே உயர்ந்ததென்றும், தமிழ் இலக்கண நூலாரெல்லாம் வடநூலாரிடத்துக் கடன் கொண்டாரே என்றும் இக்காலத்துச் சிலர்கொண்ட கொள்கையை இவரும் * குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டு விடாராயினர். இப்பிடியை விடுவித்தல் எம்மனோரால் இப்பிறவியில் இயலாது போலும்.

* 'குரங்குப்பிடி.' என்பதனைக் 'குயிற்குரல்' என்பது போலக் கொள்க. 'குரங்குப்பிடி' என்பதும் 'உடும்புப்பிடி' யென்பதும் உலக வழக்கு. குரங்கு ஒன்றை, ஒருநாள் ஒரு வெள்ளை வண்ணத்தார் சுடுபடை கொண்டு சுட்டதனால் அதன் உயிர்போய பின்னும் அது மரத்தின் உச்சிக் கிளையைப் பிடித்த கைபிடி விடாமல் தொங்கியது காட்சியளவையிற் கண்டது.

வடமொழிக் கடலும் தென்மொழிக் கடலும் நிலைகண்டுணர்ந்தாரென்று புகழப்படும் சேனாவரையரும் சிவஞானமுனிவரும் வடமொழி யிலக்கணங்களும் தென்மொழி யிலக்கணங்களும் பெரும்பாலும் ஒற்றுமை யுடையனவென்றும் சிலவிடங்களிலே வடநூற் கருத்தோடு மாறுகொள்ளாமல் கூறுதலே ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தென்றும் கூறினாரேயன்றி வடநூலார்பால் தமிழ் நூலாசிரியர் கடன் வாங்கினாரென்று யாண்டும் கூறினாரிலர். எனவே ப்ராதி சாக்ய நூல்களையும் யாஸ்கரது நிருத்தத்தையும் மற்றுமுள்ள நூல்களையும் பார்த்து அவற்றின் கருத்தை வாங்கிக்கொண்டே தமிழில் பிறப்பியல், மொழி மரபு, வேற்றுமையியல், உரியியல் இவற்றை வகுத்துத் தொல்காப்பியனார் கூறினார் என்று அவர் யாண்டும் குறிக்கவில்லை. குறிப்புரையாளருக்குத் தெரிந்த ப்ராதிசாக்ய நூல்களும் யாஸ்கரது நிருத்தங்களும் சேனாவரையருக்கும் சிவஞான முனிவர்க்கும் தெரியாதனவா? இவ்விருவருள்ளும் சிவஞான முனிவர்க்குத் தெரியாத வடமொழி வேதமும் ஆகமும் உபநிடதமும் வியாகரணமும் உண்டென்று அவர் இயற்றிய திராவிட மாபாடியத்தை ஒரு முறை பார்த்தாரும் கனவிலும் நினைப்பாரோ? அச்சிவஞானமுனிவர் 'இந்திரனுக்குத் தேவகுரு வடமொழியியல்பு கூறப் புகுந்தார்க்கு தேவயாண்டில் ஆயிரம் சென்றும் சொற்கள் முடிந்தில; அவ்வாறே தமிழ்மொழியும் கிருபேக் கிடந்தது' என்று சூத்திர விருத்தியுட் கூறினாரே. இப்படிக் கடன் வாங்கின தமிழ் இலக்கணத்தைத்தானோ அவ்வளவு பெருகிக் கிடந்த தென்றார். அது கிடக்க.

தொல்காப்பிய வுரையாசிரியருள் சேனாவரையர் அப்பிராதிசாக்கிய நூல்களையும் யாஸ்கரது நிருத்தங்களையும் அறிந்தவரேயாவர் ஆகையால், அந்நூல்களின் கருத்தைத் தழுவியே தொல்காப்பியனார் இலக்கணம் செய்தார் ஆயின், அதனை அவர் தெரிந்துரையாமல் இருப்பரோ? அதுகிடக்க.

தொல்காப்பியச் சிறப்புபாயிர வாசியர் ஆகிய பனம்பாரனார் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனக்கூறி

இவர் அக்காலத்தே நிலவியவடமொழி யிலக்கணம் ஐந்திர மென்பது ஒன்றனையும் முழுதுமுணர்ந்து, இருமொழிப்புலமை யோடும் தொல்காப்பியத்தைச் செய்தாரென்பது புலப்படுத் தினர். ஐந்திரத்தைக் குறிப்பிட்ட பனம்பாரனர் பிராதிசாக் கியநூல்களையும் யாஸ்கரது நிருத்தங்களையும் தொல்காப்பியத் துக்கு ஆதாரமாகச் சிறப்புப் பாயிரத்தில் குறித்திலர். அவர் பாணினீயத்தையும் குறித்திலர். இதனலும் பாணினீயம் தொல் காப்பியத்துக்குப் பிற்பட்ட தென்பதே முடிவாம். இதனலே, பிராதிசாக்கிய நூல்களும் யாஸ்கரது நிருத்தங்களும் தொல் காப்பியத்துக்கு மிகப் பிற்பட்டன வென்றே அறிந்து கொள்க. வியாசராலே செய்யப்பட்டு இப்போதை வழக்கினுள்ளன வாகிய இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களுக்கும் முற்பட்டது தொல்காப்பியம் என்னும் நச்சினர்க் கினியர்உரை பசுமரத்தாணியாக இருக்கவும், அந்நான்கு வேதங் களுக்கும் பிற்பட்டனவாகிய பிராதிசாக்கிய நூல்களும் யாஸ் கரது நிருத்தங்களும் தொல்காப்பியத்துக்கு முற்பட்டன வெனல் எப்படி? இது பேரன் பாட்டனுக்கு மூத்தான்என்பார் கூற்றுப்போலும்.

அற்றேல், எழுத்துக்களின் பிறப்பியல்பு பற்றியும் வேற் றுமையியல்பு முதலியவற்றைப்பற்றியும் தொல்காப்பியனர் சூத்திரக்கருத்திற்கு ஒப்பவே அவ் வடநூல்களில் ஓதப்பட் டிருத்தல் என்னையெனின், நன்று வினயினீர், எழுத்துக்களின் பிறப்பைப்பற்றித் தமிழிலே மூக்கிற் பிறந்தன வெனச் சொன்னவற்றை, ஆங்கில மொழியிலக்கண நூலாரே ஆயினுமாக வடநூலாரே ஆயினுமாக, நாக்கிற்பிறந்தனவெனக் கூறுவாரு ளரோ. ஆங்கில மொழியில் பெயர்ச்சொற்களுக்கு எட்டு வேற்றுமை காட்டினர் தமிழிலே கண்ட எட்டுவேற்றுமையைக் கொண்டாரோ? வடமொழியில் கண்ட எட்டுவேற்றுமையைக் கொண்டாரோ? இவ்விலக்கணங்கள் எல்லாமொழியினும் ஒத் தியல்வதைக் குறிப்புரையாளர் காணர்போலும்.

இனி வடநூலார் பிறமொழியாளரிடத்துக் கடன் கோடல் இல்லையெனின், தமிழிற் பிறந்த எத்தனையோ சொற்கள், எத்தனையோ நூல்கள் முற்காலத்தில் வடமொழியிற் சென்று போற்றப் பட்டன என்பதைத் தமிழ்ப் பெரியபுராணம் திருவிளையாடற் புராணம் மற்றுமுள்ள தமிழ்நாட்டுத் தலபுராணம் முதலியன வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வாற்றானும் உணர்க. அதனானே உணராவிடினும் 'கோங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' 'மதிமலி புரிசை மாடக்கூடல்' என்னும் தமிழ்ப்பாடல்கள், சிவபெருமானால் பாடப்பட்டன, வடமொழிப் புராணங்களில் மொழிபெயர்க்கப்பட்ட வாற்றானும் உணர்க. அதுவும் கிடக்க.

தொல்காப்பியத்தினும் மிகவிரிந்த இலக்கணம் என்று சொல்லப்படும் அகத்தியத்திலே எழுத்துக்களின் பிறப்பியல்பு மொழிமரபு வேற்றுமையியல் முதலிய இவ்வாறே சொல்லப்படவில்லையா? அவை அங்கே சொல்லப்படவில்லையென்று குறிப்புரையாளர் கண்டாரா? அகத்தியம் வழக்கிறந்தொழிந்ததனால் இவ்விலக்கணங்கள் அதனுட் கூறப்படவில்லை யென்னும் துணிபு பொருந்துமோ?

'இரண்டாகுவதே' 'மூன்றாகுவதே' என்று தொல்காப்பியனார் வேற்றுமைகளைச் சுட்டினர்; நன்னூலாரும் 'இரண்டாவதனுருபு' 'மூன்றாவதனுருபு' என்றுதானே ஓதினர். நன்னூலைப்பார்த்துத் தொல்காப்பியனார் சூத்திரம் அமைத்தாரெனினும் குறிப்புரையாளர் கருத்துக்குப் பொருந்தும்போலும்.

மறுப்பு 19.

(முகவுரை பக்கம்-6.)

வினைக்கு வேற்றுமையுருபைச் சேர்ப்பின், அது பெயராய்த் தமிழில் ஆகின்றது என்றார்.

பெயர்ச்சொல் வேற்றுமைஉருபை ஏற்குமேயன்றி வினைச்சொல் வேற்றுமையுருபை ஏற்பதுண்டோ?

'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமோடு தோன்றும்' என்னும்
சூத்திரப்பொருளை நோக்கிலர் போலும்.

மறுப்பு 20.

(முகவுரை பக்கம்-7.)

ஒவ்வொரு சூத்திரத்திலும் ஒன்றனையே உத்தேசித்து ஒன்றே விதிக்கப்பட்டது. சிற்சில சூத்திரங்களில் அவ்வாறு இன்றாகத் தோன்றினும், ஊன்றி நோக்கின் அவ்வாறே புலப் படத் தடையில்லை. இம்முறை சாத்திரங்கள் எல்லாவற்றினும் ஆளப்பட்டது.........அவ்வாறு சூத்திரம் செய்யாவிடின் வாக்கிய பேதம் என்னும் குற்றம்வரும். இம்முறையை ஆசிரியர் ஆண் டனர் என்பதைச் சேனாவரையர் 'இவ்வாறு ஒருபொருள் நுத லிற்றாக உரையாக்கால், சூத்திரம் ஒன்றுமாறில்லை (சொல் சூ-1) என்ற வாக்கியத்தால் விளக்கியுள்ளார்' என்று கூறினர்.

மேலும், 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே'

என்னும் சூத்திரக் குறிப்புரையிலே, 'இச்சூத்திரத்தில் 'சொல்' என்பது 'உத்தேசியம்.' மக்களைக் குறிக்கும் உயர்திணைக் கண்ணும், மக்கள் அல்லாத பிறவற்றைக் குறிக்கும் அஃறிணைக் கண்ணும் இசைக்கும் என்பது 'விதேயம்.' உத்தேசியம் முன் னரே அறியப் படினல்லது, அதனைப்பற்றி மற்றொன்று விதித்தல் இயலாது. இச்சூத்திரத்துள்ள 'சொல்' ஓரெழுத் தொருமொழி ஈரெழுத்தொருமொழி' என்னும் எழுத்ததிகாரத்துச் சூத்திரத்தால் முன்னரே பெறப்பட்டது. அதனை உத்தேசித்து, இங்கு உயர்திணை அஃறிணையின்கண் இசைத்தல் விதிக்கப்பட்டது. 'உத்தேசியம் எழுவாயாகவும் விதேயம் பயனிலையாகவும் இருக்கும்.'

'நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்தால் சொல் இரண்டு பொருள் இரண்டென வரையறுத்தாரென்று சொல்லுகிறார். அவ்வாறாயின் வாக்கியபேதம் என்னும் குற்றம் வரும்.'

'ஒரு சூத்திரத்தில் ஓர் உத்தேசியமும் ஒரு விதேயமுந்தான் இருத்தல்வேண்டும்.' 'இச்சூத்திரத்தில் மக்களைச் சுட்டுவது உயர்திணை; மக்களல்லாத பிறவற்றைச் சுட்டுவது அஃறிணை; அவ்விருதிணையின்கண்ணும் சொல் இசைக்கும் என்று மூன்று உத்தேசியமும் மூன்று விதேயமும் இருப்பதால் வாக்கிய பேதம் ஆகாதோவெனின், அற்றன்று; இதனுள் உயர்திணை அஃறிணை இவற்றின் இலக்கணம் கூறுது முன்னோர் கூறிய இலக்கணத்தையே அனுவதித்து, சொல் என்பது உயர்திணை அஃறிணையின்கண் இசைக்கும் என்பது விதிக்கப்படுகின்றது' எனவும் கூறினர்.

இவ்வாறாகக் குறிப்புரையாளர் எழுதிய உரையடங்கலும் பிழை நிறைந்ததோர் சரக்கறையாம். அப்பிழையெல்லாம் ஆராயப்புகின் அது விளையாட்டு மகளிர் அட்ட மணற்சோற்றிற் கல்லாராய்தலோடு ஒக்கும். ஆதலின், ஈண்டு அவர் அரிதின் முயன்று, பிற உரையாசிரியர் காணுதவற்றைக் கண்டுகொண்டாற்போற் சொல்லிய உத்தேசியம் விதேயம் வாக்கியபேதம் இவற்றைப் பற்றிய உரைக் கருத்தை முன்னுற ஆராய்வாம்.

இவற்றைப்பற்றிய குறிப்புரையுள்ளும் மூன்று பிழைகள் ஒன்றனோடு ஒன்றுமிடைந்துள்ளன. 'உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே' என்னும் சூத்திரத்தில் 'சொல்' என்பதுவே உத்தேசியம். மக்களைக் குறிக்கும் உயர்திணைக்கண்ணும், மக்களல்லாத பிறவற்றைக் குறிக்கும் அஃறிணைக் கண்ணும் இசைக்கும்' என்பது 'விதேயம்' என்றது முதற்பிழை.

உத்தேசியம் முன்னரே அறியப்படினல்லது அதனைப்பற்றி மற்றொன்று விதித்தல் இயலாது. இச்சூத்திரத்துள்ள 'சொல்' 'ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி' என்னும் எழுத்ததிகாரச் சூத்திரத்தால் முன்னரே பெறப்பட்டது. அதனை உத்தேசித்து இங்கு உயர்திணை அஃறிணையின்கண் இசைத்தல் விதிக்கப்பட்டது என்றது இரண்டாவது பிழை. 'ஒரு சூத்திரத்தில் ஓர் உத்தேசியமும் ஒரு விதேயமுந்தான்

இருத்தல்வேண்டும். உத்தேசியம் எழுவாயாகவும் விதேயம் பயனிலையாகவும் இருக்கும்' என்றது மூன்றாவது பிழை. இந்த மூன்றாவது பிழையைப்பற்றி முதலில் ஆராய்வாம்.

இங்கு மூன்றாவதாகக் காட்டிய குறிப்புரையின் கருத்தெல்லாம், ஒவ்வொரு சூத்திரத்திலும் ஓர் எழுவாயும் ஒரு பயனிலையுமே இருத்தல் வேண்டும் என்பதும், அவ்வாறன்றி இரண்டு முதலிய பல எழுவாயும் பல பயனிலையும் இருப்பின் வழுவாம் என்பதுமே.

இவர் கூற்றுக்கு 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரமே ஒவ்வாதாயிற்று. அச்சூத்திரத்தில் 'என்மனார்' 'என்மனார்' 'இசைக்கும்' என மூன்று பயனிலைகள் வந்துள்ளன. முதலாவது 'என்மனார்' என்னும் வினைமுற்றுப் பயனிலை ஆசிரியர் என்னும் தோன்றா எழுவாயைக்கொண்டு முடியும். இரண்டாவது 'என்மனார்' 'அவர்' என்னும்தோன்றா எழுவாய்கொண்டு முடியும். மூன்றாவதாகிய இசைக்கும் என்பது சொல் என்னும் எழுவாயைக்கொண்டு முடியும். ஆகவே இச்சூத்திரத்தில் மூன்று வினைமுற்றுப் பயனிலைகளும் மூன்று எழுவாயும் உள்ளனவேயாம். ஆகவே ஒரு சூத்திரத்தில் ஒரு பயனிலையும் ஓர் எழுவாயுமே இருத்தல்வேண்டும் என்றது மலையிடரும்.

இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர், நச்சினார்க்கினியர் இவரெல்லாம், சூத்திரத்தில் நின்றபடியே, மூன்று பயனிலையும் மூன்று எழுவாயும் இசைத்து விளங்க உரை கூறினர் ஆகவும், இக்குறிப்புரையாளர் மாத்திரம், அப்படிக் கூறின் வாக்கியபேதம் என்னும் குற்றம் உண்டாகும் என்று சொல்லி, அவ்வுரையாசிரியர் உரைநடையை மாற்றி, 'மக்களைக் குறிக்கும் உயர்திணைக் கண்ணும், மக்களல்லாத பிறவற்றைக் குறிக்கும் அஃறிணைக் கண்ணும் சொல் இசைக்கும்' என்று பொழிப்புரை கூறினர். இதனால் இவர், ஆசிரியர் தொல்காப்பியனார் 'என்மனார்' என்று இருமுறை

கூறியது வெற்றெனத் தொடுத்தல் என்னும் குறிப்பினர் போலும். அக்குறிப்பினராயினும், சொன்னிலையை மாற்றித் தமக்குத் தோன்றியவாறே பொருள் உரைக்க இவர்க்கு ஆணையின்மையறிக.

இனித், தெய்வச்சிலையார்,

'செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்'
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப.' (கிளவியாக்கம் சூ-28.)
'அவற்றுள்' தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த.' (ஷை சூ-29.)
'ஏனை யிரண்டும் ஏனை கிடத்த.' (ஷை சூ-30)

என்னும் மூன்று சூத்திரங்களையும் சேர்த்து ஒரு சூத்திரமாக்கிப் பொருளுரைத்தார். ஆண்டு அம்முறை பொருந்தும் என்றே குறிப்புரையாளர் கூறினர். அதன்மேல்,

'ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய.' (எச்சவியல் சூ-48)
'அவற்றுள்' ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே.' (ஷை 49)
'தாவென் கிளவி ஒப்போன் கூற்றே.' (ஷை 50.)
'கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே.' (ஷை 51)

இந்த நான்கு சூத்திரங்களையும் அத்தெய்வச்சிலையாரே ஒரு சூத்திரமாக்கிப் பொருளுரைத்தார். இவ்விடத்திலோ, வாக்கிய பேதம் என்னும் குற்றம் வரும் ஆதலின் அது பொருந்தாதெனக் குறிப்புரையாளர் உரைத்தார். இப்படி முன்னொடு பின் மலையக் கூறுதலும் இவர்க்கு இயல்பாதல் அறிக.

இவர், மேலும் பல சூத்திரங்களைப் பற்றிய உரைகளிலும், இப்படியாதலின் வாக்கியபேதம், அப்படியாதலின் வாக்கிய பேதம், என்று குறித்துச் சென்றார். ஆகவே வாக்கியபேதம் என்னும் வடநூற் குற்றம் இவரிடத்து அகப்பட்டுப் படாதபாடெல்லாம் படலாயிற்று.

இவர் வடநூலிலிருந்து . உத்தேசியம் விதேயம் வாக்கிய பேதம் என்பவற்றைக் கொண்டுவந்து நம்மனோரை மயக்கல் வேண்டா. சூத்திரத்தின் இயல்பு இன்னது என்று தொல்காப்பியனார் கூறுதொழிந்தாரல்லர். சூத்திரம் என்பதன் இலக்கணம் இன்னது, ஓத்தின் இலக்கணம் இன்னது, படலத்தின் இலக்கணம் இன்னது, நூலின் இலக்கணம் இன்னது என்று விரிவாகச் செய்யுளியலினும் மரபியலினும் எடுத்தோதினார். குறிப்புரையாளர் வடநூலுள் அரிதிற் கண்டெடுத்த பெரிய சூத்திர இலக்கணமெல்லாம்,

‘ ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த ஓத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்று
ஆங்கனை மரபின் இயலும் என்ப’ என்னும்

செய்யுளியற் சூத்திரத்தில், ‘ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்’ என்பதனால் பெறப்படும். இன்னும், சூத்திரத்தின் இலக்கணங்களை,

‘ அவற்றுள், சூத்திரந்தானே,
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருள் நனிவிளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே.’ (செய்-சூ-170)
‘ மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்திற் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்
துளக்க லாகாத் துணைமை எய்தி
அளக்க லாகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்றெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்.’ (மரபியல் 100.)

என்னும் சூத்திரங்களால் தொல்காப்பியனார் விளங்க ஓதினார். ‘ஒருபொருள் நுதலிய சூத்திரத்தானும்’ என்றதனால், ஒரு சூத்திரத்தில் ஓதப்படுவது ஒருபொருளே யென்றார். எனவே,

ஒன்றற்கொன்று தொடர்பில்லாத இரண்டு பொருள்களைப் பற்றிய விதி விலக்கப்பட்டதாம். ஆயினும் எடுத்துக்கொண்ட பொருளோடு இயைபுடையதாய் அப்பொருளை அவாய் நிற்கும் பிறிது பொருளும் இன்றியமையாத இனப்பொருளும் ஒரு சூத்திரத்திலே ஒருங்கே விதியிலக்கணம் பெறுதல் விலக்கப்பட்டதன்று. நன்னூலாரும்

'சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்.' என்றே

ஓதினர். எந்த நூலாசிரியரும் ஒரு சூத்திரத்தில் ஓர் எழுவாயும் ஒரு பயனிலையுமே இருத்தல்வேண்டுமென்று கூறினரிலர்.

சூத்திரத்தின் இலக்கணத்தைச் சேனாவரையரை ஒப்ப மிக நுண்ணியதாக ஆராய்ந்து தெளிந்துரைத்தவர் ஆசிரியர் சிவஞான முனிவர். அவருடைய ஆராய்ச்சியின் தெளிவைச் சிவஞான போதம் சூ-4 உரையுட் காண்பாம்.

(தொடரும்.)

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
147	23	ஆராய்ச்சியுரை யொன்று	ஆராயச்சியுரை யென்று
148	12	மென்ருளி	மென்றேளி
165	20	முகவுரையின்	முகவுரையில்
166	2	அவ்விரண்டிலுழுள்ள	அவ்விரண்டிலுமுள்ள
173	7	சான்றென்பது	என்பது
175	11	படுத்தவேண்டா	படுத்தல்வேண்டா
180	17	உரையும்	பாயிர உரையும்
183	33	கைபிடி	கைப்பிடி
184	23	கிருபெக்	பெருகிக்
,,	31	பாயிரவாசியர்	பாயிரவாசிரியர்